Registerd as a Newspaper பக்கங்கள் 08 விலை: ரூபா 6-00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 23 | 9 - 12 - 94 | வெள்ளிக்கிழமை | ஓசை 294


## க. பொ. த. பரீட்சை விடை எழுதும் தாள் போதியளவு வழங்க பின்னடிப்பு

யாழ் நகரப் பகுதியில் முன்னணி பாடசாலைகள் சிலவற்றில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் க. பொ. த. [சா/த] பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு போதியளவு விடை எழுதும் தாள்களை வழங்க மேற்பார்வையாளர்கள் பின்னடித்து வருவதாக மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். மேற்படி பரீட்சை நிலையங்களில் கூடிய விடை எழுதும் தாள்களை மாணவர்கள் கோரிய போது, விடை எழுதும் தாள்கள் குறைவாக இருப்பதால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அவற்றை தர முடியும் எனவும், ஒவ்வொரு கேள்விக்கான பதிலையும் புதியதொரு விடை எழுதும் தாளில் தொடங்க வேண்டிய அவசியமில்லை எனவும் மேற்பார்வையாளர்கள் கூறியுள்ளனர். இதேவேளை, சில மேற்பார்வையாளர்கள் விடை எழுதும் தாள்களை பரீட்சைகள் முடிந்ததும் தங்களதுசொந்தப் பாவனைக்கு கொண்டு போவதாக மாணவர்கள் வேதனையுடன் கூறுகின்றனர். (நி, இ)

# அரசின் தாக்குதல் நிறுத்த யோசனை; புலிகளின் தலைமைப்பீடம் ஆராய்வு

## விரைவில் பதில் கடிதம் அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையால் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தினால் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருவதாக புலிகள் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பிரதி பாதுகாப்பு அமைச்சரால் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இக்கடிதத்தில்தாக்குதல் நடவடிக்கையை நிறுத்துவது குறித்தும் அடுத்தகட்ட பேச்சு வார்த்தையைத் தொடங்குவது தொடர்பான விடயங்கள் குறித்த விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இவரது கடிதம் குறித்து ஆராய்ந்து வரும் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் இதற்கான பதிலை விரைவில் அனுப்பி வைக்கவுள்ளதாக புலிகளின் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது

# புலிகளின் பதில் கிடைத்ததும் யுத்தநிறுத்த திகதி அறிவிக்கப்படும்

## - பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பதில் கிடைத்ததும் யுத்த நிறுத்த திகதி அறிவிக்கப்படும். இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துளார்.

விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகவும், இதற்கான பதிலை அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாகவும் நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்தர த்திரிகையாளர் மகாநாட்டில் அவர் கூறினார்.

இதேவேளை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் முழுமையான கருத்துப் பரிமாற்றங்களுக்கு பின்பே ஆனையிறவுப் பாதை திறக்கப்படுமெனவும், வடபகுதிக்கான போக்குவரத்துப் பாதை ஒன்று திறக்கப்படும் பட்சத்திலேயே வடக்கிற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளையோ, மின்சார விநியோகத்திற்கான வேலைகளையோ செய்ய முடியும் என ''தினமின'' சிங்களப் பத்திரிகைக்கு அனுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

# புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தை; இந்தியப் பிரதமருக்கு கதிர்காமர் விளக்கம்!

## பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா ஒத்துழைக்குமாம்

### -இந்திய வெளியுறவு இணை அமைச்சர்

(புதுடெல்லி)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான பேச்சுக்களிற்கு இந்தியா இயன்ற வகையில் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக இந்... மைச்சர் ஆர். எல். பாட்டியா தெரிவித்துள்ளார்.

பாட்டியாவைச் சந்தித்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் அவர்

## டில்லியில் தலைவர்களுடன் பேச்சு

(டில்லி)

சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் - இந்தியப் பிரதமர், அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களில், விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது பற்றி முக்கியமாக கலந்துரையாடப்பட்டதாக இந்திய வானொலியின் தெற்காசிய சேவை நேற்று

## ரூபவாஹினி, வானொலி செய்தி அரச அறிவிப்பல்ல

### அனுருத்த ரத்வத்த

(கொழும்பு)

ஆனையிறவு பாதை திறக்கப்படுவது தொடர்பாக வானொலியிலும், ரூபவாஹினியி... தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு பகுதியில் அவசரகால நிலையை நீடிப்பது தொடர்பான விவாதத்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான பேச்சுக்களிற்கு இந்தியா இயன்ற வகையில் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக இந்திய வெளியுறவு இணைய

டியா தெரிவித்துள்ளார்.

பாட்டியாவைச் சந்தித்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பூநகரி முகாமைத்தாக்க புலிகள் திட்டமாம்

### இராணுவ வட்டாரம் கூறுவதாக ஐலண்ட்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் பூநகரி இராணுவத்தளம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தலாம் எனவும் இத்தாக்குதலுக்கு புலிகளின் உயர் கட்டளைப்பீடம் திட்டமிட்டுவருவதாகவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது,

தமிழ் மக்கள் பிரயாணம் செய்ய வாய்ப்பான சங்குப்பிட்டி- கேரதீவு பாதையை பூநகரி முகாம் தடுத்திருப்பதால் புலிகள் இதற்கு திட்டமிட்டு வருவதாகவும் இதன் மூலம் அரசாங்கத்திற்கு அழுத்தம் ஒன்றை புலிகள் பிரயோகிக்க முடியுமெனவும் ஐலண்ட் மேலும் தெரிவித்துள்ளது.

## வட-கிழக்கு ஆளுநராக காமினிபொன்சேகா?

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுநராக முன்னாள் பிரதி சபாநாயகரான காமினி பொன்சேகா நியமிக்கப்படலாம் என தெரியவருகின்றது.

இதேவேளை மேல்மாகாண சபை ஆளுநராக இருந்து பதவி விலகியுள்ள டி. சுவாமிநாதனின் இடத்துக்கு புதியவர் ஒருவரை நியமிப்பதுபற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும்,

நாட்டின் ஏனைய ஆறு மாகாணசபைகளின் ஆளுநர்களை உடனடியாக பதவி விலகுமாறு கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடத்திய பேச்சுக்களில், விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது பற்றி முக்கியமாக கலந்துரையாடப்பட்டதாக இந்திய வானொலியின் தெற்காசிய சேவை நேற்று தெரிவித்தது.

மேற்படி கலந்துரையாடலில் இந்திய-சிறிலங்கா கூட்டுக் கமிஷனின் பரிந்துரைகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க இருப்பது நம்பிக்கை தரும் செய்தியாகும் என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவிததுள்ளதாகவும் இந்திய

[08ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளை தடைசெய்யும் கோரிக்கை சுவிஸ் பாராளுமன்று நிராகரிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்யும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை சுவிஸ் பாராளுமன்றம் நிராகரித்துள்ளது

சுவிற்சர்லாந்தின் நீதியமைச்சர் சுவிஸ் பாராளுமன்றத்தில் புலிகளை தடைசெய்யும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்க மறுத்துள்ளார்.

இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை மேற்படி கோரிக்கை சுவிஸ் பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## முதலீட்டாளர் நம்பிக்கையை குலைக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு முயற்சி

### -நீதி அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் தொழிலாளர் பிரச்சினையை தூண்டிவிட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை குலைத்து நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க முயற்சிகள் மேற்கொள்வதாகஎதிர்க்கட்சிகள் மீது நீதிஅமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தொழிலாளர் பிரச்சினைகள் உருவெடுத்திருப்பதால் வெளிநாட்டு முதலீடுகளில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் கூறினார்.

அத்துடன் இலங்கையும் ஜப்பானும் கூட்டாகநடத்துப் செரமிக் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

(கொழும்பு)

ஆனையிறவு பாதை திறக்கப்படுவது தொடர்பாக வானொலியிலும், ரூபவாஹினியிலும் வெளியான செய்திகள் அரசாங்க அறிவிப்புகள்அல்ல. இவ்வாறு நீர்ப்பாசன மின் சக்தி அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அநுருத்த ரத்வத்த பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு பகுதியில் அவசரகால நிலையை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. எனவும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி

## உயர்தர பரீட்சை முடிவுகள் விரைவில் வெளியாகும்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நடைபெற்ற க. பொ. த, உயர்தர பரீட்சை முடிவுகள் இன்னும் இருவாரங்களில் வெளியாகும் என தெரியவருகிறது

இதன் திருத்த வேலைகள் முடிவடைந்துவிட்டதால் விரைவில் முடிவுகளை வெளியிடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக பரீட்சைத் திணைக்கள சிரேஷ்டஅதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 1994/95

[ 8ஆம் பக்கம் பார்க்க]

## கனிஷ்ட தொழில்நுட்ப தராதரப் பரீட்சை

### 14ஆம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

கனிஷ்ட தொழில்நுட்ப தராதரப் பத்திர பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை தங்கள கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளரிடம் இருந்து சேகரித்து மாணவர்களுக்கு சுட்டெண்

[8ஆம் பக்கம் பார்க்க]

## பாப்பரசர் வருகையை அடுத்து சமாதான முயற்சிகளில் தீவிரம்

(கொழும்பு)

பாப்பரசரின் வருகையைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு முயற்சிகளில் தீவிரம் ஏற்படும் அறிகுறி தோன்றியுள்ளதாக கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் போர் நிறுத்தம் எவ்வேளையிலும் சாத்தியப்படலாம். இது குறித்து அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்து வருகின்றது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஆகியோரோடு இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளார்.

பரிசுத்த பாப்பரசரின் வருகையை கொண்டு எதிர்கால சமாதான நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்குடன் போர் நிறுத்தத்தை கொண்டுவர தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி மேலும் அத்தினசரி தெரிவித்துள்ளது.

## இன்று படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு போதிய உணவு, மருந்து அனுப்புக!

### சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

மனித உரிமைகளிற்கான சர்வதேச ஜெனிவா மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய வட பகுதிக்கு போதுமான மருந்துப்பொருட்கள், போதுமான உணவுப்பொருட்கள் அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு ஒன்று கேட்டுள்ளது.

விசாரணையின்றி தடுத்து வைத்துள்ளவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என அவ் அமைப்பு மேலும் கேட்டுக்கொண்டுள்ளது.

உலகில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் மனித உரிமைகளிற்கான சர்வதேச மகாநாடு ஒன்று ஜெனிவாவில் கூட்டப்பட்டது.

[8ஆம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

### புகைப்படங்கள்

வட இலங்கை நுண் கலை என்ற சான்றிதழ் வழங்கல் தொடர்பான புகைப்படங்களை திங்கள், புதன், வெள்ளிகளில் பெற்றுக்கொள்ளவும். கலையகம் இல. 6, பென்ரிக் கோஸ் லேன் கண்டி வீதி கச்சேரியடி, (10318)

### நத்தார் பெருநாள் பரிசு

மில்க்வைற் சலவைத்தூள் பாவனையாளர்கட்கு இரட்டிப்பு இனிய செய்தி. 450 கிறாம் பக்கற் சலவைத்தூள் விலை ரூ. 45/- ஆகக்குறைப்பு. 450 கிறாம் வெற்றுப் பக்கற் ஒன்றுக்கு இருப்புள்ள வரை வழிபாட்டுக்குரிய கிறிஸ்தவ வண்ணப்படம் அன்பளிப்பு. :'மில்க்வைற்', (சி - 10875)

### "சக்தி" இயற்கைப் பசளை

மண்வளம் பெருக்க, பயிர்களுக்கு ஊட்டம் அளிக்க வேண்டிய காலமிது. கூட்டெரு முறையில் தயாரான ''சக்தி'' பசளை மலிவாகக் கிடைக்கிறது. கிலோ ரூ. 10/- மட்டுமே. பாவித்து பயன் பெறுங்கள் மில்க்வைற் (சி - 10855)

### ஒரு காலப் பெட்டகம் மீரா பிரசுரங்கள்

பாடசாலைகள், நூலகங்கள் ஆவணப் பாதுகாப்புக்கு. முதலாவது ஈழப்போர், இரண்டாவது ஈழப்போர், காலகட்டத்தில் போராட்டம் கலந்த மக்களின் வாழ்வை இயல்பாகச் சொல்லியுள்ள ''மீரா பிரசுரங்கள்'' விற்பனையாகின்றது. வசந்தம், ராஜன், பாலாஜி புத்தக சாலைகள் யாழ்ப்பாணம். (10332)

### குரு மாற்ற பலாபலன்கள்

ரூ. 10/- விற்பனையாகின்றது யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தைகள் பரிணாம வளர்ச்சியடையும். பாடசாலை உபகரணங்கள் காகிதத்தாள்கள், சத்யாவின் வியாழமாற்றம் விற்பனையாகின்றன. சுரேகாபுத்தகசாலை, பஸ் -நிலையம், யாழ்ப்பாணம், (10336)

### பெற்றுக் கொள்ளவும்

7. 12. 94 அன்று கொக்குவில் சந்திக்கு அருகாமையில் ஒரு தொகைப் பணத்துடன் ஒரு பேர்ஸ் கண்டெடுக்கப்பட்டு நவாலி வீதி ஆனைக்


## சோட்டோகான்

நிதிகளிடம் கராட்டே பழகினாலும் - பின்வந்த காலப்பகுதியில் தாங்களாகவே போலிசான்றிதழ்களைஅச்சடித்து வழங்கிபயிற்றுனர்களாக மாறியுள்ளனர். இவர்கள் இன்று கண்டபடி தங்கள் எண்ணப் போக்கிற்கேற்ப கறுப்பு பட்டிகளைக் கூட வழங்கி வருவதுடன் தங்களுக்கும் கறுப்புபட்டிகளின் எண்ணிக்கையை போலியாக கூட்டியும் வருகின்றனர். இலங்கை கராட்டே சங்கத்தை தவிர வேறு எந்த அமைப்பும் உண்மையில் எந்த ஒரு ஜப்பானிய நிபுணராலும் அங்கீகரிக்கப்படாமை முக்கியமானது. ஆனால் பத்திரிகைகளில் இவர்கள் போடும் விளம்பரங்களில் இவர்கள் பாவிக்கும் வார்த்தைகளும் கறுப்பு பட்டிகளின் எண்ணிக்கையும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுனர் என்ற முறையில் என்னை வேதனையுறவே செய்கின்றது. கராட்டே பயில்பவர்கள்தான் இந்தப் போலித்தனங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

□ பெண்கள் கராட்டே பழகுவதற்கு முன் வரும் நிலை பற்றி குறிப்பாக யாழ்ப்பாணப் பெண்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?

கராட்டே என்பது வயது அடிப்படையிலோ, பால்வேறுபாடு ரீதியாகவோ இன்னாருக்குத்தான் என பாகுபடுத்தப்படும் ஒரு கலையல்ல. அடிப்படையில் இது ஒரு தற்காப்புக்கலையுமாகும் எனவே பெண்கள் கராட்டே பழகுவதென்பது வேடிக்கையான விடயமுமல்ல. நாங்கள் பத்திரிகைகளில் அளித்த விளம்பரங்களைப்பார்த்து சில பெண்கள் தாங்கள் பயிற்சி பெறப் போவதாக வந்தார்கள். தங்களுக்கு தனிப்பட்ட முறையில் பயிற்சி தருமாறு அவர்கள் கேட்டனர். நான் வீடு வீடாகச் சென்று கராட்டே பழக்குவதில்லை. இதனால் இவர்களுக்கு கராட்டே கற்றுத்தர என்னால் முடியாமல் போனது.

□ கராட்டே பட்டிகள் என்ன ஒழுங்கில் வழங்கப்படுகின்றன?

வெள்ளை, மஞ்சள், ஒறேஞ் நாவல், நீலம், மண்ணிறம் மூன்று, மண்ணிறம்இரண்டு. மண்ணிறம்ஒன்று எனச்சென்று கறுப்பு பட்டி தற்காலிகம்பின் கறுப்பு பட்டி நிரந்தரம்ஒன்று இரண்டு, மூன்றுஎனதொடர்ந்து செல்லும்.

□ கராட்டே கலையில் உங்களது வாரிசை எப்படி தேர்ந்தெடுக்கிறீர்கள்? அவர்களைப் பற்றிக் கூறமுடியுமா?

எனது சிரேஷ்ட மாணவர்களில் நம்பிக்கைக்குரியவர்களை எனது வாரிசுகளாக கருதுகின்றேன். பரமேஸ்வரன், ஜசிதரன், ஜெயசிறிதரன், செல்வக்குமார், அருணோதயன், மகேஸ்வரன் ஆகியோரை நம்பிக்கைக்குரியவர்களாக கருதுகிறேன். இவர்களைத்தவிர பல்கலைக்கழக மட்டத்திலும் அங்கு பயிற்சி பெறுபவர்களில் திறமையானவர்களுள்ளனர். புவனேந்திரன், ஹென்றீசன், சற்குணராஜா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

□ இறுதியாக, உங்களது எதிர்காலத் திட்டம் பற்றி என்ன தீர்மானித்துள்ளீர்கள்?

மறைந்த துணைவேந்தர் துரைராசா அவர்கள் ஞாபகார்த்தமாக கராட்டே சுற்றுப் போட்டியொன்றை பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையிலும். திறந்த போட்டியடிப்படையிலும் நடத்த திட்டமிட்டேன். இது தொடர்பாக யாழ்.பல்கலைக் கழக நிர்வாகத்திடமும் அனுமதி கோரவுள்ளேன். இதைவிட பாடசாலைகள், கல்லூரிகளிலும், கராட்டே பயிற்சியை வழங்க மேற்படி தாபனங்களுக்கு விண்ணப்பிக்க உள்ளேன்.

தனது கருத்துக்களை தெளிவாக தந்த தர்மராசாவுக்கு ஈழநாதம் வெள்ளிமஞ்சரி சார்பில் நன்றி தெரிவித்து விடைபெற்றோம்.

## நெற்பயிரில் காவோலைப் புழு தாக்கம்

(யாழ்ப்பாணம்)

நவாலி, மானிப்பாய் பகுதிகளில் உள்ள நெற்பயிர்களில் ''காவோலைப் புழுக்களின் தாக்கம் வெகுவாகப்'' பரவி வருகிறதாக விவசாயதரப்பினர் கவலை தெரிவித்துள்ளனர்.

இலைகளின் மேற்பகுதியில் பச்சைநிற வடிவிலான சிறிய இப்புழுவானது ஆரம்பத்தில் இருந்து அழிக்கப்படாவிட்டால் தண்டுறிஞ்சியபகுதியை தாக்கி நெற்பயிரை முற்றாகத்தாக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)


## யாழ் வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ் ஆரியகுளம் சந்தியிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள செயலகங்களிலும், ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கரும பீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1 **சலுகை செய்திகள்** முதல்15சொற்களுக்கும் ரூபா 15/- ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்

2. **வழமைச் செய்திகள்** முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்படும்

3. **வியாபாரச் செய்திகள்** முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம்அறவிடப்படும்

(மேற்கூறப்பட்ட 1,2 ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா 100/-ம் 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்)

**அவசர கட்டணம் அறவிடப்பட்டு செய்திகள் கடுகதியில் விநியோகிக்கப்படும்.**

மேலதிக விபரங்களை அந்த அந்த கருமபீடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-10872)


## நினைவு கூருகின்றோம்...

**09.12.1994**

1986-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை - பச்சனூர் பகுதியில் பேருந்தில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப். ரங்கன்** (பேச்சிமுத்து விமலநாதன் - கள்ளிமேடு, தம்பலகமம் - திருமலை)

திருமலை - பேராற்றுப் பகுதியில் எமது முகாம் ஒன்றின்மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**பவான்** (— - திருமலை)

1987-ம் ஆண்டு யாழ்-உடுவில் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**அன்ரன்** (தியாகராசா மன்மதராசா - தாவடி தெற்கு, கொக்குவில் - யாழ்)

யாழ் - கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினரின் திடீர்ச் சோதனையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் பாரத்** (நடராசா தேவராசா - பாரதிவீதி மானிப்பாய் - யாழ்)

1988-ம் ஆண்டு மட்டு-ஒந்தாச்சிமடம் பகுதியில் இந்தியப்படையினர் எமது முகாமைச்சுற்றிவளைத்த போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். சிவா** (அருளம்பலம் சிவஞானம் - களுதாவளை - மட்டு)

1989-ம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**திலிப்** (கா. கருணாநிதி-10ம் கிராமம்-அம்பாறை)

யாழ்-குடாநாட்டில் பரவலாக இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்கள் 13 பேர்.

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும், சிறிலங்காப்படையினராலும், இந்தியப் படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில், நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10871)

இளைப்பாறிய வடமாநில சித்திர வித்தியாதரிசியும், முன்னைநாள் சன்மார்க்க சபைத் தலைவரும், குரும்பசிட்டி கலாகேசரி கலாலயம் ஸ்தாபகருமான,

## கலாகேசரி - ஆ. தம்பித்துரை

அவர்களின்

# 90-ம் நாள் நினைவாக...

கலாகேசரியே! இன்றுடன் நீங்கள் மறைந்து தொண்ணூறு நாட்கள் தொலைந்து விட்டன. என்றாலும், எங்கள் நினைவுகள் மட்டும் உங்களைச் சுற்றியே படருகின்றன. ஈழத்தாயின் எழிற்கலைச் சிம்மமே! சிற்ப, ஓவியச் சிகரமே! நீங்கள் நித்தியமானவராக எங்களுடனேயே வாழ்வீர்கள்.


## நம்பிக்கையின் சேவை

ஜெசித்தாரா 85%ற்கு மேற்பட்ட சுவை விரும்பிகளின் நம்பிக்கையை பெற்றுள்ளது. காரணம், சுத்தம், தரம், நாணயம், யாழ். மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்று உங்கள் மங்கள நிகழ்வுகள், பிறந்தநாட் கொண்டாட்டங்கள், திருமண வைபவங்கள், பிரியாவிடை நிகழ்வுகள் எதுவானாலும் உங்கள் இடத்திற்கே வந்து பரிமாறும் சேவை வழங்குவோம். அல்லது எங்கள் மண்டபத்தில் உங்களது நிகழ்வுகளை இனிதாக்கித் தருவோம்.

ஒருமுறை எம்மை அணுகுங்கள்

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

## இதோ! அறிமுகப்படுத்துகிறோம்!

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா வழங்கும்

அன்டி - டன்ரி

நெய் புரியாணி (கோழி-ஆட்டிறைச்சி)

சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

பிற்பகல் 12. 00 மணி முதல் 3. 30மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கோழி ரூபா 67. 50 மட்டுமே

ஆட்டிறைச்சி ரூபா 47. 50 மட்டுமே

ஏமாற்றத்தை தவிர்க்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஒரு பேர்ஸ் கண்டெடுக்கப் பட்டு நவாலி வீதி ஆனைக் கோட்டையிலுள்ள உலக உலா செயலகத்தில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது. உரிய வர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (10334)

வராக எங்களுடனேயே வாழ்வீர்கள்.

தங்கள் நினைவுடன்
திருமதி சிவகுரு பாக்கியம் (சகோதரி)
உறவினர், ஊரவர், நண்பர்கள்,
வழிதொடரும் கலைஞர்கள்.

சுண்ணாகம்.
(சி-10878)

முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகளோ அன்றி முகவர் களோ இல்லை.

புது யுகத்தில் புது உருவம்
ஜெசித்தாரா.

(சி-10866)

ஏமாற்றத்தை தவிர்க்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

உங்கள் விருந்தகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
[முன் ஒழுங்கை]
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

புது யுகத்தில் புது உருவம்

ஜெசித்தாரா

(சி-10867)

### கோழி விற்பனை

பென்டம், பாமாஸ், பிறிமா, சில்கி, கோழி, குஞ்சு விற்ப னைக்கு உண்டு, விபரங்கட்கு க. வித்தியானந்தன், சம்மந்த பிள்ளையார் கோவிலடி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக் கோட்டை. (10327)

### சுகாதார சேவை பணிப்பாளராக சிறீகாந்தா

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் என். சிறீகாந்தா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் செயலாளரிடமிருந்து மிக விரைவில் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நியமனம் தொடர்பாக சுகாதார அமைச்சு டாக்டர் என். சிறீகாந்தாவை யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக தெரிவு செய்துள்ளதாகவும் அவருக்கான நியமனக் கடிதத்தை உடனடியாக் அனுப்பிவைக்கும்படி சுகாதார அமைச்சின் செயலாளர் வடக்கு கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளருக்கு பணித்துள்ளார்.

மேற்படி நியமனத்திற்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வைத்திய அதிகாரிகள் நான்குபேர் நேர்முகத்தேர்விற்கு கொழும்பு சென்று திரும்பியமையும் பின்னர் மந்திரிசபைக்கு விடப்பட்ட இந்நியமனம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொடுக்கப்பட்டமையும் தெரிந்ததே.

## புரட்சித் தலைவர் - மக்கள் திலகம்

அமரர் - டாக்டர் எம். ஜி. ஆரின்

# ஏழாம் ஆண்டு நினைவு நாள்



24, 25, 26. 12. 1994, சனி, ஞாயிறு, திங்கள்

கொக்குவில் மஞ்சவனப்பதி
ஆலய அரங்கு

தலைவர் ;- பொன். மதிமுகராஜா
(தலைவர், அனைத்துலக எம். ஜி. ஆர் பேரவை)

தமிழ்தாய் வாழ்த்து, மங்கள இசை, தமிழ் மரபிசை, நினைவு பேருரை, எம். ஜி. ஆர். விருது வழங்குதல், கவியரங்கு, பட்டிமன்றம் கரகாட்டம், நாடகம், நடனம், வில்லிசை, மெல்லிசை இசை அமுதம், தமிழின சட்ட மன்றத்தில் விவாதம்.

குறிப்பு :- குருநகர், பாசையூர் சிலைகளிற்கு மாலை அணிவித்தல்.

24. 12. 94

பொதுஸ்தாபனங்கள் எம். ஜி. ஆர். திருவுருவப் படத்திற்கு மாலை சூட்டி மரியாதை செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

- 40 மைல் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி. ஆண்களிற்கானது ஈழத்திற்கானது.
- 15 மைல் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி. வயது வித்தியாசமில்லை. ஈழத்திற்கானது. பெண்களிற்கானது.
- 10 மைல் மரதன் ஓட்டப் போட்டி. ஆண்களிற்கானது. 25வயதுக்குட்பட்டவர்கள்.
- கயிறு இழுத்தல் போட்டி. கழகங்களிற்கானது.
- சயிக்கிள் றிச்சோ (மூன்று சில்லு) 08 மைல், தமிழீழத்திற்கானது,

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவர்கள் 20 - 12 - 94 -ம் திகதிகு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப்படிவங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்

போட்டியில் வெற்றி பெறும் வீரர்களுக்கு எம். ஜி. ஆர் தங்கப்பதக்கம் வழங்கப்படும், அன்பர்கள் அனுதாபிகள் அனைவரையும் ஆதரவு தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

(பங்கு பற்றுகின்றவர்கள் மேலதிக விபரங்களிற்கு தலைமைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.)

தொடர்பு - கொள்ள வேண்டிய விலாசம்:

## அனைத்துலக எம். ஜி. ஆர் பேரவை

எம். ஜி. ஆர். இல்லம்
தாவடி, கொக்குவில்.

சகல விதமான சூடான - குளிரான உணவு வகைகளுக்கு

## லிங்கம் கூல் பார் வெலிங்டன் சந்தி.

(சி - 10873)

## முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள சிறு திரைஅரங்கிற்கு அனுமதி பெற்றவர்களும் அனுமதி வழங்கப் பட்டவர்களும், புதிதாக இணைய விரும்புபவர் களுக்கு 10-12-94 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு தீப் வீதியிலுள்ள நிதர்சன அமலன் அரங்கில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின் றோம்.

நன்றி,

கலைஊடக இணையம்

சி - 10878)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் டில்லர் கலப்பை கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சங்க வேலை நாட்களில், தலைமை நிலையத்தில் டில்லரைப் பார்வையிட்டு, கேள்விப் பத்திரங்களைப் பெற்று, 17.12-94-ந் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு அறியத் தருகின்றோம்.

பொது முகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்,
07.12.94

(சி-10880)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

# விடுதலை நோக்கிய மண்டேலாவின் நீண்ட நடைப் பயணம்

நெல்சன் மண்டேலா- எப்படிப்பட்டதொரு அற்புதமான மனிதர் - ஒடுக்கப்படும் இனங்கள் போராடினால் வெற்றி காண்பது நிச்சயம் என்பதன் பிரதிபலிப்பாக வாழும் உயிர்ச்சின்னம் அல்லவா அவர் -இன்று வாழ்வின் இறுதிப் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கும் அவர் 27 வருடங்களாகத் தனிமையெனும் வெஞ் சிறையிலே வாட்டிய அரசையே தன் காலடியில் விழ வைத்த மனிதர்- இன்று அவரது மென்மையான புன்னகை - இதமான போக்கு - அளந்து பேசி உயர்நிலை அரசியல் தலைவர்க்குரிய இராசதந்திரப் பண்புகளைக் காண்பிக்கும் முறை - இவற்றை விட மிக நல்ல முதிர்ச்சியான உண்மை மனிதர் இவர் என இன்று உலகம் போற்றும் பாங்கு - இத்தகைய பாராட்டுகளுக்கு சொந்தக் காரரான மண்டேலா உண்மையிலேயே எப்படிப்பட்ட மனிதர்? அவர் உண்மை வரலாறு என்ன? சிறை வாழ்வின் வெம்மையிலிருந்து தன்னை அவர் எவ்வாறு காப்பாற்றிக் கொண்டார்? இப்படிப்பட்ட பல கேள்விக்கு மண்டேலாவே இப்போது விடை தருகின்றார். அவரின் வார்த்தைகளால் வார்க்கப்பட்ட அவரது வாழ்க்கை வரலாற்று நூல் இம் மாதம் வெளிவரப் போகின்றது. இந்நூலை தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் போராட்டச் செய்திகளை வெளியுலகிற்கு அறிவிப்பதிலே கடந்த 8 வருடங்கட்கு மேலாகத் தம்மைஈடுபடுத்திக் கொண்ட அமெரிக்க செய்தியாளரான **Richard Stengel** தொகுத்துள்ளார். கடந்த 18 மாத காலமாக மண்டேலாவுடன் கூடவிருந்து அவரது நினைவுகளை மீட்கச் செய்வதில் இவர் வெற்றி கண்டுள்ளார். மண்டேலா சிறையிலிருந்த போது இரகசியமாக எழுதிய அவரது வரலாற்றுப் பிரதியொன்றும் இந்நூல் வெளிவர உதவியுள்ளது. அந்த வகையில் மண்டேலாவின் நினைவுத் திறன் மிக அற்புதமானது. அவர் ஒரு வகையில் நாட்காட்டிபோல,ஒளிப்படக் கருவிபோல தனது மனக்கண் மூலம் எச்செய்தியையும் மீட்டு படம் பிடித்துக்

## எப்படிப்பட்ட மனிதர் மண்டேலா?

மண்டேலாவின் வாழ்வு என்பது தான் வரித்துக் கொண்ட இலட்சியத்திலே முழு நம்பிக்கை கொண்டு வாழ்ந்த ஒரு வாழ்வின் பெறுமதியின் பிரதிபலிப்பு என்கிறார் இவ்வமெரிக்கசெய்தியாளர். மண்டேலா வெளிப்படையாக தெரிவது போல் அல்லாமல் மிகச் சிக்கலான மனோநிலையைக்கொண்டவர் என்றும் அவர்ஒரு உள்வயமாகசிந்திக்கும்மனிதர் அல்லர் என்றபோதும்அவர் எப்போதும்தான் நினைப்பதை மட்டுமே வெளியில் சொல்வார்- உணர்வுபூர்வமாக தான் உணர்வதையல்ல- சிறைவாழ்க்கை அவரை உருக்குப்போல இறுக்கிவிட்டதும்இதற்குகாரணமாகலாம். என தொகுப்பாளர் கூறுகின்றார். அவரிடம் எப்போதும் ஒரு இரட்டைத் தன்மை காணப்பட்டதாககூறும் இவர் எவ்வளவு தான் உலகப் போக்கோடு ஒத்ததாக தன்னை அவர் காட்டிக்கொண்டாலும் இனவாதத்தின் - நிறவேற்றுமையின் வெம்மை அவரை எப்போதுமே சுட்டெரித்துக் கொண்டிருந்தது என்கின்றார். சிறை வாழ்க்கை என்பது அவருக்கு துன்பங்களை மறைக்க தனக்குள்ளே அடுக்கடுக்காக தடுப்புச் சுவர்களை உருவாக்ககற்றுக்கொடுத்ததால் உள்ளார்ந்தஆழமான வேதனையை புதிய சூழலின் புகழ் மிக்க தன்மையில் மறைக்க இப்போது அவரால் முடிந்து விட்டது என்கிறார் றிச்சர்ட். மண்டேலாவின் சொந்தவரலாற்றுநூலின் ஒரு சில பகுதிகளை முற்கூட்டியே வெளியிடுவதில் பெருமை அடைவதாக கூறும்அமெரிக்க ''ரைம்'' இதழ் றொபின் **(Robben Island)** தீவின் சிறைக் கொட்டடியில் 18 வருடங்களாகமண்டேலாவின் வாழ்வு எவ்வாறு கழிந்தது என்பது பற்றிய பகுதியை மிகச் சுருக்கமாக வெளியிட்டு தனக்கு புகழ் சேர்த்துக் கொண்டது.

## வாழ்வே போராட்டம்

மண்டேலாவின் வாழ்வு என்பது ஆழமான உள்மனக் காயங்களை மறைக்கதடுப்புச் சுவருக்கு மேல் தடுப்புச்சுவர்

வும் அடக்குமுறையுமே அவர் சந்தித்தவை. 1918 யூலை 18-ம் திகதி திரான்ஸ்காய் (**Transkei**)மாநிலத்தில் பழம் பெருமைமிக்க கோசா (**Xhosa**) பழங்குடியின் அரசமரபில் பிறந்த மண்டேலா மிக இளவயதிலே தந்தையை இழந்தார். பின் 21 வயதிலே அவருக்கு பழங்குடியினர் மரபுக்கேற்ப மணமுடிக்க முற்பட்டபோது அதை விரும்பாது யோகானஸ்பேர்க் நகரத்திற்கு அவர் செல்வதோடு அவர் வரலாறு மாற்றமடைகின்றது இருந்தபோதும் திரான்ஸ்காயில் தான் சிறுவனாக இருந்தபோது தனது குலத்துப் பெரியவர்கள் சொன்ன பழைய வீர மரபுக் கதைகள், நாட்டைக் காத்திட அவர்கள் புரிந்த போர்கள் பற்றியகதைகள் தன்னை தனது நாட்டின் விடிவிற்காகப் போராட உந்துசக்தியானது என மண்டேலா நினைவு கூர்கின்றார். 1941-ம்ஆண்டு யோகானஸ்பேர்க் வந்த மண்டேலாவின் வாழ்வு வால்டர் சிசிலுவின் நட்பால்ஆபிரிக்கதேசியக் காங்கிரசோடு இணைய வாய்ப்பளித்தது. இதே வேளை அங்கு வந்து சேர்ந்த ஒலிவர் தாம்புவும் இவர்களோடு இணைந்து மிதவாதப் போக்கில் மெல்ல நடை போட்டுக் கொண்டிருந்த ஆபிரிக்க தேசியக் காங்கிரசை தீவிரமான போராட்ட நிலைக்கு தள்ளினர். இவ் வாலிபர் குழுவின் போக்கால் ANC யின் போக்கே மாறியது. வால்டர் சிசிலுவின் வழிகாட்டலில் வழக்கறிஞராகியும் விட்ட மண்டேலாவின் வாழ்வே அவரே கூறியதுபோல் நாளாந்தப் போராட்டமாகியது தென்னாபிரிக்க நிறவெறிக் கொள்கையின் உச்ச ஒடுக்குமுறைகட்கு முகம் கொடுக்க முயன்ற மண்டேலாவின் குடும்ப வாழ்வு இக்கட்டத்தில் முறிவடைகின்றது. 1950 களின் நடுவில் அவரது முதல் மனைவியான ஈவ்லின் இன்டோகோவோடு மண முறிவு ஏற்பட்டுமணவாழ்க்கை சிதைவடைந்தபோதும்மண்டேலாவின் போராட்டப் பணியில் தளர்வேற்படவில்லை. இக்கட்டத்திலே சமூகநல ஊழியராக பணிபுரிந்த வின்னியோடு அறிமுகமாகி இருவர்க்குமிடையே பிணைப்பொன்று தோன்றுகின்றது. 1958-ம்ஆண்டு யூனில் அவரு

ஏனென்றால் மண்டேலா 1960களில் தலைமறைவாகி விடுகின்றார். 1962ம் ஆண்டின் தொடக்கத்தில் நாட்டைவிட்டே வெளியேறிய அவர் பின் நாடு திரும்பிய போது 1962 ஆகஸ்ட்மாதம்



5-ம் நாள் 17 மாதகால தலைமறைவின் பின் கைதாகினார். அதன் பின் அவர் தென்னாபிரிக்கா நீதிமன்றிலே தனக்காக தானே வாதாடி நீதிமன்றையே தனது போராட்டக் களமாக்கினார். எனவேதான் வின்னி ''அவரோடு வாழ்ந்தது என்பது அவரில்லாமலே வாழ்ந்தது என்றாகிவிட்டது'' இவ்வாறு மண்டேலாவின் இல்லறவாழ்வு என்பதும் ஒரு துன்பியல் தொடர் நாடகமாகியது. இன்றும் அவ்வாறே ஆகிவிட்டது.

## மென்முறையானது வன்முறைக்கு

இக்கட்டத்திலே தான் மண்டேலாவின் மனநிலை மாற்றம் காண்கின்றது, மென்முறை (அகிம்சை) போராட்டங்களினால் எப்பயனும் கிட்டாத நிலையில் நம்பிக்கையிழந்த மண்டேலா ''கட்சித் தலைமையானது மழுங்கிப்போன அதன் ஆயுதங்களை தீட்டி கூராக்க தயங்குமானால் அது மக்கட்கு இழைக்கும் துரோகம் என்றும் அகிம்சை கொள்கை என்னும்

கோலினார். அன்றையதினம் தென்னாபிரிக்காவின் பலஇடங்களிலே குண்டுகள் வெடித்தன புதிய வழியில் போராட்டம்சென்றது. தேசத்தின் ஈட்டியின் முதல் தளபதியே மண்டேலாதான். தனது முதல் அறிக்கையில் தேசத்தின் ஈட்டி குறிப்பிட்டதாவது: மக்களின்பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. ஒவ்வொரு தேசத்தின் வரலாற்றிலும் ஒரு தருணம் வரும். அப்போது

இரண்டே வழிகள் தான் மிஞ்சியிருக்கும். ஒன்று -பணிந்து போதல்-மற்றது துணிந்துபோராடுதல். அத்தருணம் இப்போது தென்னாபிரிக்காவிற்கு வந்துவிட்டது'' அரசின் வன்முறைக்கு எதிராக மக்களின்வன்முறை - எதிர்ப்புரட்சிகர வன்முறைக்கு எதிராக புரட்சிகர வன்முறை-வன்முறை மீது வெறி கொண்டவனும் புரட்சியாளன் அல்லன் -வன்முறை என்றாலே வெட்கப்பட்டு ஒதுங்கிறவனும் புரட்சியாளன் அல்லன் என்கிற கருத்துப்பட மண்டேலா 1960 களில் பேசிய பேச்சுக்கள் தென்னாபிரிக்காவை அதிரவைத்தன. ஆயினும் 1963 ம் ஆண்டு யூலை 11-ம் நாள் தேசத்தின் ஈட்டியின் தலைமைப்பணிமனை இருந்த இடமான யோகனர்ஸ் பேர்க் நகரின் ரிவோனியா எனுமிடத்திலிருந்த ஒரு பண்ணை தென்னாபிரிக்க இரகசியப் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டு வால்டர் சிசிலு,கோவாள் எம்பேக்கி உட்பட பல தலைவர்கள் கைதாகினர்.மண்டேலா உட்பட இவ் ஒன்பது தலைவர்க்கும்

போது மண்டேலா உரத்து பறை சாற்றிய வரிகள் என்றென்றும் உலகின் காதுகளில் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.

''எனது மக்கள் வெள்ளையர் ஆதிக்கத்திற்கு எதிராக போராடி வெற்றி காண்பதாயின் அவர்கட்கு வன்முறை வழியைத் தவிரவேறு வழியில்லை'' என்ற மண்டேலா இறுதியில் கூறினார் ''எனது மக்களின் விடிவிற்காகஅதனை அடைவதற்காக நாம் வாழவே விரும்புகின்றோம். ஆயினும் அந்த இலக்கை அடைவதற்காக நாம் சாகவும் தயாராகவிருக்கின்றோம்.'' இதுவே உலகத்தின் எந்தவொரு மனிதப் பிறவியும் அடைந்திராத கொடிய 27 வருட சிறை வாசத்தில் முன்னாள் மண்டேலாவின் மிகமிக சுருக்க வரலாறு. இந்த நீண்ட நெடும் சிறை வாழ்வு மண்டேலாவை எவ்வாறு புடம் போட்ட பொன்னாக்கியது, எவ்வாறு அவரை உருக்கி இறுக்கிற்று - எவ்வாறு அவரது போக்கிலே பண்புரீதியான மாற்றங்கள் ஏற்பட்டது என்பது அவரது நூலிலே இப்போது வரலாற்றுப் பதிவாகி விட்டது.

## றொபின் தீவில் மண்டேலா

தனது சுயசரிதையிலே தான் முதல் நாள் றொபின் தீவுச் சிறைக்கு (கேப்டவுனிலிருந்து வடமேற்கே ஏழு மைல் தொலைவில் கொந்தளிக்கும் கடல் நடுவேயிருந்த ஒரு மொட்டைப் பாறையில் அமைந்திருந்த சிறை) கொண்டு செல்லப்பட்டதை நினைவு கூரும் மண்டேலா அச்சிறையில் ஆகக் கூடிய பாதுகாப்பு கொண்ட 30 அடி மதிலால் சூழப்பட்ட

கள் கடைநிலை வகுப்பான பிரிவு**D (Group D)** யில் வைக்கப்பட்ட போதும் இவர்களிடையேயும் நிறவேற்றுமை சிறையதிகாரிகளால் காண்பிக்கப்பட்டது. கறுப்பர் தவிர்ந்த நிறத்தவர் (**Coloreds**) இந்தியர்கட்கு சற்று உயர்வான கவனிப்பு கறுப்பர்கட்கு கட்டைகாற்சட்டைசீருடையாளர்- மற்றவர்க்கு முழு நீள காற்சட்டை உணவிலும் அவ்வாறே வேறுபாடு - சிறை என்பது ஒருவனது மேன்மையை, பண்பை சிதைக்க கவர செய்யும் முயற்சியேஎன்கிறார்மண்டேலா- மோசமான ஈரலிப்பான அறை, மோசமான உணவு பாகுபாடுகள் பற்றி முறைப்பாடு செய்தால் கிடைக்கும் ஏளனமான பதில் மேலும் வதைக்கும் என்கிறார் மண்டேலா கறுப்பனின் உடல் ஈரத்தை உறிஞ்சி விடும் என்றும், சிறைக்கு வெளியே உங்கள் வாழ்வு இதைவிட மோசமானது வெறும் கபீர்கட்கு (**Kaffir** கறுப்பு ஆபிரிக்கன் எனப்படும் சொல்) வீட்டில் கிடைக்காத உணவல்லவா இங்கு கிடைக்கின்றது என்றுமே பதில் வரும் என்கிறார் மண்டேலா.

இவ்வாறுதான் மண்டேலாவினதும் மற்றோரினதும் சிறைவாழ்வு அமைந்தது. காலையில் பழைய எண்ணெய் தகர மூடிகளிலே சோளக்கஞ்சி - கறுப்பு நிறத் திரவம் கோப்பி என்கிற பெயரில் வழங்கப்படுவதோடு காலை ஆரம்பமாகும். பின் கல்லுடைக்கும் பணி இடைவிடாது தொடர்ந்து மதியம் வரை நடக்கும். மதிய உணவின் (அனேகமாக மூன்று நேர உணவும் சோளம் போன்ற தானியக் கஞ்சியாகவும் இடைக்கிடை சிலமரக்

பாலகுமாரன்

6 அடி(2மீ) நீள அகலம் கொண்ட வரிசை அறைகளில் - ஒன்றில் தமது வாழ்வு ஆரம்பமானதை விபரிக்கின்றார். அவரது அடுத்த 18 வருட வாழ்வு மூன்று எட்டு எடுத்து வைந்தாலே நடக்க முடியாத- படுத்தால் தலையும் காலும் இருபக்க சுவர்களிலும் முட்டும்- எப்போதும் ஈரலிப்பாக இருக்கும் விடியற்காலையில் நீர் தேங்கிவிடும் - அவ்வறையில் புற்பாயொன்றோடும் -கிழிந்த சில போர்வைகளோடும் கழிந்தது.மண்டேலாவின் கொட்டடிக்கு முன்னே சிறிய கடதாசி மட்டையில் இவ்வாறு

கறித் துண்டுகள் மறைந்து கிடக்கும் என்றும் எப்போதாவது இறைச்சித் துண்டுகள் காணக் கிடைப்பதாக இருக்கும்) பின் கல்லுடைத்தல் தொடரும் மாலை 4மணிக்கு குளிரான சூழலின்போதும் குழாய்களில் வரும் கடல் நீரால் உடல் கழுவல்-திரும்ப 4.30 மணிக்கு கொட்டடியில் திரும்ப அடைக்கப்படல் - D பிரிவு கடைநிலை கைதிகள் என்பதால் பத்திரிகை பார்க்க முடியாது - நேரம் அறிய முடியாது - 6 மாதத்திற்கொருமுறையே வெளியிலிருந்து எவரும் சந்திக்கலாம்- 6 மாதத்திற்கொருமுறை

நினைவுத் திறன் மிக அற்புதமானது. அவர் ஒரு வகையில் நாட்காட்டிபோல, ஒளிப்படக் கருவிபோல தனது மனக்கண் மூலம் எச்செய்தியையும் மீட்டு படம் பிடித்துக் காட்டும் வல்லமையுள்ளவர் என நூல் தொகுப்பாளர் பாராட்டுகின்றார். மண்டேலாவின் சுய வரலாற்று நூல் மிகப் பொருத்தமாக விடுதலைக்கான நெடும் பயணம் (Long walk to Freedom) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## வாழ்வே போராட்டம்

மண்டேலாவின் வாழ்வு என்பது ஆழமான உள்மனக் காயங்களை மறைக்கதடுப்புச் சுவருச்கு மேல் தடுப்புச்சுவர்களைஎழுப்பிநல்லதேநடக்கும் வெற்றியே எனது முடிவாகும். என்கிறதிட நம்பிக்கைக் கவசம் பூண்டதாகவே முழுமையாக அமைந்து விட்டது. ஏனென்றால் சிறுவயதிலிருந்தே அவர் வாழ்வின் ஒவ்வொரு திருப்பத்திலும் காழ்ப்புணர்

கட்டத்திலே சமூகநல ஊழியராக பணிபுரிந்த வின்னியோடு அறிமுகமாகி இருவர்க்குமிடையே பிணைப்பொன்று தோன்றுகின்றது. 1958-ம்ஆண்டு யூனில் அவருக்கும் வின்னிக்கும் திருமணம் நடைபெற்ற போதே அவர் அரச துரோக வழக்கில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருந்தார். மிகக் குறுகிய கால குடும்ப வாழ்க்கையே இவ்விருவருடையது.

ளது மழுங்கிப்போன அதன் ஆயுதங்களை தீட்டி கூராக்க தயங்குமானால் அது மக்கட்கு இழைக்கும் துரோகம் என்றும் அகிம்சை கொள்கை என்னும் அத்தியாயம் முடிவிற்கு வருவது போல் தோன்றுகின்றது என்றும் குறிப்பிடலானார். இவற்றின் காரணமாக மண்டேலா 1961-ம்டிசம்பர் 16-ம் நாள் ''தேசத்தின் ஈட்டி'' எனப்படும் ANC யின் இராணுவப்பிரிவை ஆரம்பிக்கவழி

யிடப்பட்டு வால்டர் சிசிலு, கோவான் எம்பேக்கி உட்பட பல தலைவர்கள் கைதாகினர். மண்டேலா உட்பட இவ் ஒன்பது தலைவர்க்கும் எதிராக 1963-ம் ஆண்டு அக்டோபர் 9-ம் திகதி ஆரம்பமான அரசத்துரோக வழக்கே ரிவோனியா வழக்கு (Rivonia Trial) என உலகப்புகழ் பெற்றது. 1964-ம் யூன் மாதமளவில் இவர்களுக்கு ஆயுள் தண்டனைவிதிக்கப்பட்டது. அப்

றோடும் -கிழிந்த சில போர்வைகளோடும் கழிந்தது. மண்டேலாவின் கொட்டடிக்கு முன்னே சிறிய கடதாசி மட்டையில் இவ்வாறு தான் எழுதப்பட்டிருந்தது. N. மண்டேலா 466/64- இதன் பொருள் 1964-ம்ஆண்டின் 466 ஆவது சிறைக் கைதி என்பது தான். மண்டேலாவின் சிறைவாழ்வு மிகக் கொடியது. அதிலும் ஒன்றாகக் கைதான அரசியல் கைதி

க்க முடியாது - நேரம் அறிய முடியாது - 6 மாதத்திற்கொருமுறையே வெளியிலிருந்து எவரும் சந்திக்கலாம்- 6 மாதத்திற்கொருமுறையே கடிதம் எழுதவோ பெறவோ முடியும் - இவை மிகக்கொடுமையான வேதனையான வருத்தல் முறைகள் என்கிறார் மண்டேலா. ஏனென்றால் ஆபிரிக்க குடும்ப உறவுகள் பரந்தவை- விரிவா

[7ஆம் பக்கம் பார்க்க]

ஆயுதம் இன்றித் தாக்குதல் எனப் பொருட்படும் கராட்டே (Karate) இன்று உலகில் பிரபலமான ஓர் ஜப்பானிய வார்த்தை. இந்தியாவின் திபெத் பீடபூமியில் தோன்றி போதிய வரவேற்பில்லாததால் சீனா ஊடாக ஜப்பான் தேசத்தை சென்றடைந்தது இக்கலை. மாஸ்டர் நனாக்குயி என்பவரே நவீன கராட்டேயின் தந்தையாவர். பிறப்பிலேயே உடல்வலிமை குறைந்தவராக பிறந்த இவர் -கராட்டேயை சீராக கற்றமையால் உடல்ரீதியாக மட்டுமல்லாமல் உளரீதியாகவும் வலிமை பெற்றதாக கூறிச்சென்றார். இவரது வாரிசுகளே இன்று உலகம் புகழும் ஜப்பானின் கராட்டேநிபுணர்களாக மிளிர்ந்துள்ளனர், மிளிர்ந்து வருகின்றனர். கராட்டேயில் பல பாணிகள் (Styles) பின்பற்றப்பட்டு வருகின்றன சோட்டோகான் (Shotokan), குஜீக்கான் (Gajukan) வூட்டோகான் (Wodokan), றீன்னோகான் (Rengo-kan), பூடோகான் (Budokan என்பவை இவற்றுள் சிலவாகும். இவற்றுள் சோட்டோகான் என்பது பிரபல்யமானாலும் நிர்வாக ரீதியாக ஜப்பானுடன் வழிமுறைகளை நேரடியாக கொண்டதுமாகும். இதன் தலைமை நிபுணராக சீகான் கிரக்காசு கன்னாஷாவா (Shikan Hirokazu Kanzava) என்ற 9-ம் கறுப்புப் பட்டி பெற்ற வீரருள்ளார். இன்று ஒலிம்பிக் விளையாட்டுக்களில் ஜூடோ புகுத்தப்பட்டது போல கராட்டேயும் இடம்பெற வேண்டுமென்பது இவரது தீவிர முயற்சியாக உள்ளது. இலங்கையில் கராட்டே வளர்ச்சிக்கு களம் அமைத்து தந்தவர் தமிழரான சென்சேய் பொனி றொபேட்ஸ் என்ற தனிமனிதரென்பது குறிப்பிடத்தக்கது. 5-ம் கறுப்பு பட்டி பெற்றவராக இவர் காணப்படுகின்றார். CKA எனப்படும் இலங்கை கராட்டே சங்கத்தின் (Ceylon Karate Association) ஸ்தாபகரான இவர் ஜப்பானினால் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டவரும் ஆவார்.

# 'சோட்டோகான்' கராட்டே கலை பயிற்றுநருடன் ஒரு சந்திப்பு

யாழ் குடாநாட்டில் சோட்டோகான் கராட்டே கலையில் தனித்துவம் மிக்க வரும்-வடஇலங்கை சோட்டோகான் கராட்டே இன்ரநஷனல் பெடரேஷனின் (Shotokan Karate International Federation - Shri lanka north) அமைப்பாளருமான தர்மராசாவை அண்மையில் சந்தித்தோம்.

குடாநாட்டில் புற்றீசல்கள் போல் எழுந்துள்ள கராட்டே ஆசிரியர்க எனத் தங்களை கூறிக்கொள்பவர்களை பற்றி வேதனையோடு குறிப்பிட்டார் தர்மராசா. ஈழநாதம் வெள்ளிமஞ்சரி வாசகர்களுக்காக அவருடனான நேர்காணலை இங்கே தருகின்றோம்.

☐ கராட்டேகலையில் உங்களது நிலைபற்றிக் கூறுவீர்களா?

நான் இரண்டாம் கறுப்புப் பட்டியை சோட்டோகான் பாணியில் பெற்ற முதல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். அத்துடன் இலங்கை கராட்டே சங்கத்தால் பிரதம பயிற்றுநனரும், பரீட்சகரும் என்ற தகுதியையும் பெற்றுள்ளேன்.

☐ கராட்டேயில் உங்களுக்கேற்பட்ட ஆர்வம் தற்செயலானதா?

அப்பிடிக் கூறலாம். 77-ம் ஆண்டளவில் நண்பரொருவர் எங்களது ஊரில் கராட்டேயைபழக்கிக்கொண்டிருந்தார் அவருக்கூடாகவே கராட்டேயை நான் முதலில் கற்றுக் கொண்டேன். அந்த நண்பர் இலங்கையில் கராட்டே வளர்ச்சியில் முதன்மையானவரான பொனிறோபர்ட்ஸ் அனுப்பிய பிரதிநிதியிடம் கராட்டேயை பழகியிருந்தார் 77க்கு பிறகு திவ்விய ஜீவன சங்கத்தில் கராட்டே வகுப்பொன்று நடைபெறுவதாக பத்திரிகைகளில் விளம்பரம் வந்தது அதைத்தொடர்ந்து நான் கராட்டேயை ஆர்வமாக பழகத்தொடங்கினேன்


☐ மற்றைய கலைகளை விட்டு கராட்டேமேல் உங்களுக்கு தனிப்பட்ட ஆர்வமேற்பட்டமைக்கு காரணம் எதுவும் இருக்கிறதா?

ஆரம்பகாலத்தில் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் என்பவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தேன். இவற்றில் வெற்றியோதோல்வியோ குழு முயற்சியை சார்ந்தது. இந்த நிலையில் தனிநபரது திறமையை வெளிப்படுத்துவதற்கு கராட்டே எனக்கு அனுகூலமாக பட்டது. கராட்டே பழகுவதற்கு ஒரு சிறிய இடம் இருந்தால் போதுமானதாக இருப்பதும் வசதியான நேரத்தில் தனித்துப் பயிற்சியில் ஈடுபட முடிவதும் எனக்கு இலகுவாக இருந்தது. நேரத்தை ஒடுக்கி பயிற்சி செய்ய வேண்டிய அவசியமும் இல்லாதிருந்தது. நல்லதொரு இளைஞர் கூட்டமும் சேர்ந்து பயிற்சி பெற வாய்த்துக் கொண்டது. முகுந்தன், குருபரன் போன்ற நண்பர்களும் எனது தாயாரும் ஊக்குவித்ததும் எனக்கு கராட்டேயில் ஆர்வத்தை இன்னும் வளர்த்தது.

ரகுராம்

☐ நீங்கள் தொடர்ந்துயாரிடம் பயிற்சிகளை பெற்று வந்தீர்கள?

[7ஆம் பக்கம் பார்க்க]



வட இலங்கை சோட்டோகான் கராட்டேஇன்ரநஷனல் பெடரேஷனின் அமைப்பாளர் தர்மராசா (நடுவில்) வுடன் அவரது சகாக்கள்-

1994முத்தமிழ் விழாவில் சர்வதேச சிறுகதைப்போட்டியில்முதற் பரிசு பெற்ற :

## சிறுகதை

# நடந்து வந்த பாதை தனை

நேரமோ சிறகடித்து பறக்கிறது. சற்று முன்தான் ஐந்து மணியைப் பார்த்த மாதிரி இருக்கிறது. பார்த்தால் 5.30 ஐத்தாண்டி, 6 மணியை நோக்கி வேகமாக முட்கள் நகருகின்றன. வின்ரர் குளிர் வேறு, இருளைச் சீக்கிரம் வரவழைக்கிறது. இன்னும் ஆரணியைக் காணவில்லை. எரிச்சல், எரிச்சலாக வருகிறது. என்ன பெண் இவள்! எங்கட காலத்தில் விளக்கு வைச்ச பிறகு வீட்டுற்கு வந்திருப்போமா. வரத்தான் விடுவார்களா. ஆரணிக்கு இதெல்லாம் புரியுமா. எங்கடை காலத்து பழக்கவழக்கம், பண்பாடுகளை எடுத்து சொல்லப்போனால் ஓரிடத்தில் நின்றுதான் கேட்கிறாளா. காதைப்பொத்திக் கொண்டு பழம்புராணம் காணும் என்று கத்தத்தான் தெரியும். எங்கடை கலாச்சாரத்தின் அருமை, பெருமைகளை அறியக்கூட என்ர பிள்ளைக்கு கொடுத்து வைக்கவில்லை. எப்பதான் புரிந்து கொள்ளப் போகிறாளோ! சில நேரங்களில், அவளின் கதைகளுக்கு ஓங்கி ஆசை தீரமாறி மாறி அறைய வேணும்போல கைகள் பரபரக்கும். ஆனால் இங்கே அதைக் கூட செய்ய இயலாதே.

என்னுடைய கணவர் வேலை முடிந்து வந்துசேரவே இரவு 8.30 ஆகிவிடும். வரும்போது அனேகமாக தலைவலிப் பாட்டுடன் வருவார். அந்த நேரம், ஆரணியைப் பற்றி சொல்லவா முடியும்? போதாதற்கு ஆரணி வேறு வீட்டிலிருப்பாள். அவள் காதில் விழுந்தால் அவ்வளவுதான். தொலைத்து விடுவாள். இரவில் படுக்கையில் கதை எடுத்தால் இரண்டு, மூன்று தரம் ம், ம் சத்தம் வரும். பிறகு கொரட்டைச் சத்தம் வரும் இருளிற்குதான் என் கவலைகளை, பயங்களை சொல்லலாம். சனி, ஞாயிறுகளில் கூட அவரிற்கு அலைச்சல்தான். மகளின் படிப்புச் செலவு, வீட்டுச் செலவு போன்ற எல்லாச் செலவையும்அவரே சமாளிக்கவேணும் என்றதால,பகுதி நேரவேலையும் செய்து அறவேண்டிய தலைவிதி. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில 4 மணிக்கு வேலை முடிய 4.30 க்கு டாணென்று வீட்டை வந்து நண்பர்கள் சூழ அரட்டை அடிச்ச மனுஷன் அது எவ்வளவு சந்தோஷமான காலம். இங்கே கதைக்க கூட ஆட்களில்லாமல், பூட்டிய வீட்டுக்குள் நடைபயிலுவது ஒரு வாழ்க்கையா! அங்கேயென்றால் பக்கத்துவீட்டு சுதா, விஜி, தங்கம்... என்று ஒருபட்டாளமே வரும். கல, கல வென்று எங்கடை வீடிரு

த்தபிள்ளை. அக்காவின் பிள்ளை என்றாலும், அவனைப்பொறுத்தவரை நான்தான் அம்மா. அக்காவிற்கு ஏதாவதொரு வருத்தம் சிறுவயது முதலே மாறிமாறி வரும். அசோக் பிறந்த கையோடு, ஒரு வருஷம் படுத்த படுக்கை. அறிவு வராத பிஞ்சுப்பருவம் முதல் மழலை பேசும் வரை அவனை வளர்த்தெடுத்தது நான்தான். இதால சின்ன வயசில அவனுக்கே சந்தேகம் தன்ர தாய் யாரென்று. என்னைச் சித்தி என்று சொல்லித்தந்தாலும் அம்மா என்று வாய் நிறையக் கூப்பிடுவான். அறிவு வந்த பிறகு கூட சித்தி என்று கூப்பிடமனமில்லாமல் சின்னம்மா என்று தான் கூப்பிடுவான். அனேகமாக காலை முதல் இரவு வரை எம்மோடு தான். படுக்கை மட்டும் தாய் வீடு. எமக்குக் குழந்தையில்லாத கவலையை போக்கியவன் அவன்தான். எம்மைப் பொறுத்தவரை அசோக்தான் எங்கடை மூத்த பிள்ளை. எங்கடை செல்லப் பிள்ளை. எங்கடை பிள்ளையில்லாக் கவலை போகட்டும் என்று அக்காவும் கண்டு கொள்வதில்லை.

இப்படியே காலம் வேகமாக உருண்டோட, ஏழு வருஷத்துக்கு பிறகு அக்காவுக்கு, துவாரகாவும் எனக்கு ஆரணியும் ஆறுமாச இடைவெளியில் பிறந்தனர். ஆனாலும் என்னைப் பொறுத்தவரைஆரணிஇரண்டாவது பிள்ளை தான்.அசோக்கைப் பொறுத்தவரையும், துவாரகாக்கும் ஆரணிக்கும் வித்தியாசமில்லை. இன்னும் சொல்லப் போனால் ஆரணியைத்தான் கூடத்தூக்கித்திரிவான். அவளும் அண்ணா, அண்ணா - என்றபடி அவனையே சுற்றியபடிதான்.

காலச்சக்கரமும் சுழன்றது. ஷெல், பொம்பர் என்று எங்கடை மக்களைப் பிடித்த பீடையும் தொடர்ந்தது. எங்கடை பிள்ளைகளும் வளர்ந்தார்கள். அசோக்குக்கு 12 வயது நடக்கும் போதுதான், எங்கடை குடும்பத்தில முதல் துர்அதிர்ஷ்டம் நிகழ்ந்தது. வேலைக்கு முழுமையாகப் போன அத்தானை பகுதிச் சிதறல்களாக, பெட்டி கூட திறக்கமுடியாமல் கொண்டாட வைத்தது பொம்பர். யாரையும் பேசிக் கூட அறியாத அப்பாவி மனுஷனுக்கு இந்தக்கதி. நாங்கள் எல்லோ

பும், பகிடியுமாக எங்கடை வீட்டில் காலத்தை கழிக்கும் அசோக்கின் போக்கிலும் மாற்றமிருந்தது. அவன் பெரிதாக அழவில்லை.சோகத்தை தன்னுள் பூட்டிக்கொண்டான். ஏதோ சிந்தனை வயப்பட்டவனாக எங்கோ வெறித்தப்படியிருப்பான். கேட்டால் அரைச்சிரிப்புச் சிரிப்பான். அந்த சிரிப்போ, அவனது கண்களை எட்டாத போலிச்சிரிப்பு. காலம் போக சரிவரும். சரிவரவேணும் என நம்பினோம். ஆனால் எல்லோரது நம்பிக்கையையும் காற்றாக்கிவிட்டு போய்விட்டான், போராட்டத்தில் புலியாகி தன் பங்களிப்பை செலுத்த. நான் எதிர்பார்த்த மாதிரி அக்கா அழுது புலம்பவில்லை. அசோக்கின் முடிவு சரிஎன அடிமனதில் அவளும் உணர்ந்திருக்க வேணும்.

எனக்குத்தான் தாளமுடியவில்லை. போதாதற்கு ஆரணிவேறு ''அண்ணா எங்கேயம்மா'', என்று அரித்தபடி. அவளுக்கும், துவாரகாக்கும் உண்மை நிலை விளங்காவிட்டாலும் நிழற்படம்போல ஓரளவு புரியும் வயது. அவர்கள் பிறந்த காலந்தொட்டு

கண்டது பங்கரையும் ஷெல்லையும், பொம்பரையும் தானே. இப்படியே ஒரு வருஷம் வேகமாக சுழன்றது,

அசோக், நண்பர்களுடன் நினைத்த நேரம் வரத்தொடங்கினான். அது இரவு 12 மணியென்றாலும் நானும், அக்காவும் போட்டி போட்டபடி சமைப்போம். அவன் போனப்பிறகு எனக்கு நித்திரை வராது. ஒரு இரவில்லை, எத்தனை இரவுகள் சிவராத்திரி! கண்ணை மூடினால் அவனின் நினைவு, அரைகுறையாக தூக்கம் வந்தால், அவன் காயம்பட்டு சின்னம்மா சின்னம்மா என்று தவிப்பதுபோல கனவு வந்து திடுக்கிட்டு பதறுவதும். சாப்பிடக்கூட மனம்வராது. என்ர பிள்ளை சாப்பிட்டானோ. இந்த எரிக்கிற வெயிலில காலில செருப்புமில்லாமல் எப்படித்துடிக்கிறானோ. ஒவ்வொரு நாளும் பேப்பரில், நெஞ்சு நடுங்க வீரச்சாவுப் பெயர்களை வாசிப்பதும், தூரத்தில் சூட்டுச்சத்தம் கேட்டால் பதறி அழுவதும். எவ்வளவு பயங்கர காலம்! மனந்தாங்காமல் அசோக்கிட்ட கெஞ்சியிருக்கிறேன், விட்டுட்டு வா ராசா என்று.

தோ என்று எந்நேரமும் மனம் அலைபாயும். எங்கும் எதிலும் பயம், பயம். இப்படியே கலக்கத்தில் காலம் கழிய ஆரணியின் ஆறாவது பிறந்த நாளும் வந்தது. அசோக் நண்பர்களுடன் கட்டாயம் வருவதாக, ஆரணிக்கு வாக்களித்திருந்தான். அண்ணனுக்கு கடலை வடை பிடிக்கும். லட்டு விரும்பிச் சாப்பிடுவார் என்று அவனுக்கு பிடித்ததெல்லாம் பார்த்துப் பார்த்து செய்து வைத்துவிட்டு, கேக் கூட வெட்டாமல் வாசலுக்கும் கேற்றுக்குமாக அலைந்து கொண்டிருந்தாள். வாகனச் சத்தம் கேட்டதும், எல்லாரும் ஆவலாக வாசலைப்பார்ப்போம். அது யாரோ தெருவால் போகும் காராயோ லொறியாயோ இருக்கும். நேரமோ ஆறுமணியை தாண்டுகிறது. அசோக்கின் சத்தமில்லை. பலாலிப்பக்கமாக சூட்டுச்சத்தங்கள் தான் கேட்கிறது. எல்லோருடைய முகங்களிலும் ஒரு இனம் புரியாத பீதி. இரவு 8 மணிபோல, சோகமே உருவாக அவனுடைய நண்பர்களிருவர் வந்தனர். அவர்கள் சொல்லமுதலே நிலைமை புரிந்து நாம் கதறத் தொடங்கிவிட்டோம். எங்களால் இந்த இழப்பை நினைத்து கூடப்பார்க்க முடியவில்லை.

என்ர அசோக், நான் வளர்த்தெடுத்த பிள்ளை, என்னை விடமுதல் போய்விட்டான். அந்தச்சின்ன உயிரை எடுக்க கடவுளுக்கு கூட மனம் வந்ததே. சின்னப்பூப்போல, எவ்வளவு மிருதுவாக புல்கூட நோகாமல் நடப்பான். கள்ளமில்லாமல் சிரித்தபடி, நொடிக்கொருதரம்- சின்னம்மா சின்னம்மா என்று வலம் வந்தவனை, இனி எங்கே காணப் போகிறேன். அந்தப் பிஞ்சு உடலை ரவைகள் சல்லடை போட்ட நேரம் என்னை

வைத்தோம். வீதியோரமெங்கும் சுவரொட்டிகள், அவனது வீரத்தைஅஞ்சாததன்மையை பறைசாற்றின. காயம் பட்ட நிலையிலும் இறுதிவரை பின்வாங்காமல் தீரத்துடன் போராடியது குறித்து கதைகதையாக அவனது நண்பர்கள் பெருமையாக சொன்னார்கள்.

அக்கா நாளடைவில் ஓரளவு மனம் தேறினாலும் என்னால் முடியவில்லை. தூங்கினாலும் அவன் நினைப்பு, விழித்தாலும் மனம் அவனையே சுற்றிச்சுற்றி. என்ர வீட்டிலேயே அவன் முழுநாளும்வலம் வந்ததாலும் நானே வளர்த்ததாலும் என்னாலே இனி அவனில்லை என்ற நிஜத்தை ஜீரணிக்கவே முடியவில்லை.

இப்படித்தான் வெளியில போனவன் வருவான் என்றதுபோல, சைக்கிள் சத்தம் கேட்டால் பரபரப்புடன் வாசலைப்பார்த்து ஏமாந்து, என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையில் நிம்மதி என்ற சொல்லின் அர்த்தத்தை தொலைத்துவிட்டேன். சிரிப்புக்கு முகவரி தேடினேன். இந்நிலையில் தான் ஆரணி சொன்னாள். அண்ணாவைப் போல,வளர்ந்தபிறகு நானும் புலியாகத்தான் போவன். அண்ணாவை சுட்டவனை சுடுவன். இதைக்கேட்டு அதிர்ந்து போனேன். ஓங்கி தலையில் சம்மட்டியால் அடித்தது போல. இல்லை. இல்லவேயில்லை. இனியொரு துயரைத் தாங்கும் மனநிலை எனக்கில்லை. இவளும் போய்ப்பிறகு என்ன நடந்ததோ, எப்ப நடக்குமோ என்று அணு அணுவாக துடிக்கஇனிச் சக்தியில்லை. போதும் இந்த நிலை. இனியொரு முறை அந்த அனுபவம் வேண்டாம்.

விளைவாக இரவு, பகல் எனது கணவரை தூண்டினேன். அவருக்கோ பகிடிக்கு கூட தாயக மண்ணைவிட்டு பிரியமனமில்லை. பிள்ளையின்ர எதிர்காலத்தில உங்களுக்கு அக்கறையில்லை. உங்கட சுயநலம் தான் பெரிதாகத் தெரிகிறது. என்று பலவாறு ஓதிய பிறகுதான் வேண்டாவெறுப்பாக கிளம்ப ஆயத்தங்கள் செய்தார். அவருடைய சகோதரன் குடும்பமாக அவுஸ்திரேலியாவில்இருந்தது உதவியாக இருந்தது. அக்கா எக்காரணம் கொண்டும் கிளம்ப மறுத்துவிட்டாள் அசோக்கும், அத்தானும்

மூதாள். வந்தவுடன் அவரிற்கும் வேலைகிடைக்கவில்லை. அதைவிட தாய் நாட்டையும் நண்பர் குழாத்தையும் நினைத்து வேதனைப்படாத நாளேயில்லை. வேலையால வந்து வேப்பமரத்து நிழலில, சாய்மனைக்கதிரையில் படுத்திருந்து, பேப்பர் வாசித்து பழகின அவரால மூடிய வீட்டிற்குள் அடைபட்டிருக்க முடியவில்லை. மூச்செடுக்க முடியாததுபோல ஒரு நிலை. என்னைப் பொறுத்தவரை, ஏதோ உத்வேகத்தில் கிளம்பி விட்டேன். ஆனால் இங்குள்ள சூழல், மனிதர்கள் எல்லாமே அந்நியம்போல, நான் இங்கே ஒட்டாதது போல் ஓர் உணர்வு.

ஏதோ சங்கிலியால் பிணைத்து வைத்திருப்பதைப் போல, கழற்றிவிட்டால் யாழ்ப்பாணத்தை நோக்கி தலைதெறிக்க ஓட வேணும் போல ஒரு வெறி. இங்கே கதைக்கக்கூடஆட்களில்லாத மாதிரி மௌனம். ஒரே மௌனம். அங்கே பக்கத்துவீடு, முன்வீடு என்று அரட்டை அடித்து பழகின எனக்கு வாய்ப்பூட்டு. மொத்தத்தில் நானிங்கே, என் உயிர் அங்கே. ஆனாலும் எல்லாம் மகளுக்காக, அவளின்ர வாழ்வுக்காக என்று என்னை நானே தேற்றிக் கொண்டு வாழத்தலைப்பட்டேன். ஆனாலும் குரங்கு மனம் ஊரைப்பற்றி நினைத்து பெருமூச்சுவிடத் தயங்காது. காலப்போக்கில் கணவரிற்கு வேலை கிடைத்து விட அவரின் பொழுது அதோடு கழிந்தது.

ஆரணியும் புதிய சூழல், புதிய நண்பர்கள் கிடைக்க பழசை மறக்க ஆரம்பித்தாள். துவாரகா, அசோக் பற்றிகேட்பது வாரத்துக்கு ஒரு தடவையாகி, மாதத்திற்கு ஒரு தடவையாகி, பிறகு இல்லாமலே போய்விட்டது. ஆரம்பத்தில் அவள் மழலை மொழியில் கதைக்கும் ஆங்கிலத்தை

---

சிவகௌரி

---

கேட்க எனக்கு பெருமையாக இருக்கும். மேலும் பேசமாட்டாளா என்றதைப்போல, இப்ப ஆங்கிலத்தை நிறுத்தி

இரண்டுபடும். தலைவிதியே என்று சகிக்கிறேன். பத்தாதற்கு சுற்றுலா என்ற பெயரில் ஊர்சுற்றி நண்பர்களுடன் கும்மாளமடித்துவிட்டு வருவாள். எமது பண்பாடு மனதை உறுத்த, இருக்கமுடியாமல் வாயைக்கொடுப்பேன். லாராவின்ற அம்மா கேட்கிறதில்லை, சோனியாவை அம்மாவே அவவின் **Boyfriend** ஓட அனுப்பி வைத்தவர் என்று தொடங்கி வீடு இரண்டுபடும். சுற்றுலாப்படங்களைப் பார்த்து எனக்கு அதிர்ச்சி. முடியை நீட்டாக வளர்த்து, ஒரு காதில் தோடுபோட்ட கழுதையொன்று, எல்லாப்படத்திலும் இவளோட உரசியபடி. சகிக்கமுடியாமல் மெல்ல கதை கொடுத்தால், தோளைக்குலுக்கியபடி **We're classmates** என்றுசொல்லி விட்டு போய்விட்டாள். ஒரேயொரு நிம்மதி. வீட்டை விட்டு ஓடும் பதினாறு வயது **fashion**ஐ பின்பற்றாமல் எங்களோடு இருக்கிறாளே என்றதுதான். இதுவே ஒரு பாக்கியமாக எதனையும் நான் கண்டு கொள்வதில்லை. அவரிற்கோ இதைக்கண்டு கொள்ள நேரமில்லை. மீறிச் சொன்னால் எல்லாம் உம்மாலதானே என்று நெற்றியிலடித்த மாதிரி பதில் வரும். அவள் இங்கே வளர்ந்த பிள்ளை. அவர் சொல்லியா புத்திகேட்கப் போகிறாள். இப்ப புதுசா தலைக்கு சாயங்கள் பூசத்தொடங்கியிருக்கிறாள். இன்றைக்கு நண்பியின் வீட்டு விருந்துக்கு, நரை நிறச்சாயம் பூசியபடி போயிருக்கிறாள். எங்கடை காலத்தில, நரைச்சாலும் என்று பயந்து, கருவேப்பிலை காய்ச்சி தலைக்குவைத்தது ஞாபகத்துக்கு வருகிறது. என்ன கேடுகெட்ட நாகரிகமோ.

அக்கா துவாரகா பற்றி பெருமையாக எழுதியிருந்தாள். படிப்பில, விளையாட்டில எல்லாத்திலையும் முதல் தான். தாய்க்கு எல்லா உதவியும் செய்து கொடுத்து விட்டுத்தான் பள்ளிக்கூடம் போவாளாம். பள்ளிக்கூடம் விட்டவுடனே பதினைந்து நிமிஷத்தில வீட்டில நிற்பாளாம். தானுண்டு, தன் வேலையுண்டு என்று படிப்பே கண்ணாக. அவள் ஒரு தரமாவது எதிர்த்து கதைக்க மாட்டாளா என்று தான் நினைப்பதுண்டாம். வாசிக்க இப்படியும் ஒரு பிள்ளையா என்று பெருமைப்பட்டாலும் அடிமனதில் ஒரு ஊமைவலி. என்ர பிள்ளையும் அங்கேயென்றால் இப்படித்தானே இருந்திருப்பாள். எல்லாம் என்னால, இவளைப்பற்றி பெருமையாக நாளென்ன எழுதுவேன். துவாரகா பற்றி சொன்னால், தோளைக்

ஒரு வாழ்க்கையா! அங்கேயெ ன்றால் பக்கத்துவீட்டு சுதா, விஜி, தங்கம்... என்று ஒருபட்டாளமே வரும். கல, கல வென்று எங்கடை வீடிருக்கும். எங்களுடையதும், அக்காவுடைய வீடும் ஒரே வளவுக்குள். யார் வீட்டு சமையல் என்று கூட பாராமல் பசி வந்த வீட்டில சாப்பிட்டதும், சிரித்ததும் ஒரு காலம். அந்த வீட்டை விட்டு கிளம்புவம் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. நாங்கள் நினைத்தா எல்லாம் நடக்கிறது.

என்னையறியாமல் கண்கள் மேலேபார்க்கின்றன. அசோக் சிரிக்கிறான். சின்னம்மா என்று அவன் கூப்பிட்டதைப் போல ஒரு சிலிர்ப்பு. என்னுடைய கையால தூக்கி வளர்

திறக்கமுடியாமல் கொண்டாட வைத்தது பொம்பர். யாரையும் பேசிக் கூட அறியாத அப்பாவி மனுஷனுக்கு இந்தக்கதி. நாங்கள் எல்லோரும் ரொம்பவும் உடைந்து போனோம். அக்கா திக்பிரமை பிடித்த மாதிரி நினைத்தநேரம் அழுவதும் அரட்டுவதுமாக. ஒருகாலத்தில் புடவைக்கு போட்ட ரவிக்கை இம்மியளவுபொருந்தாவிட்டாலும். நேரத்தைப்பற்றி கவலையில்லாமல் வேறு புடவை உடுத்து வரும் அக்கா ரொம்பவும் மாறிவிட்டாள். எதை உடுக்கிறோம் என்ற அக்கறையே இல்லாமல், எல்லாமே ஒன்றுதான் என்ற ஞானிபோல, ஏதோ வாழ்க்கையை வாழவேணும் என்றதுபோல. முன்னர் சிரிப்

கேட்டால் பதறி அழுவதும். எவ்வளவு பயங்கர காலம்! மனந்தாங்காமல் அசோக் கிட்ட கெஞ்சியிருக்கிறேன், விட்டுட்டு வா ராசா என்று. அவன் சிரித்து விட்டு சொல்லுவான். எல்லாரும் இப்படிச் சுயநலமாக இருந்தால், வீட்டுக்கு வீடு தன்ர அப்பாவின் கதிதான் நடக்குமென்று. என்னுடைய ஆசைக்காக அவனின் பாதை மாறாது. நாங்கள் மாறினோம். இது தான் வாழ்க்கை என்று ஏற்றுக்கொண்டு போலியாக சிரித்து பேசி காலத்தை போக்காட்டினோம். ஆனாலும் ஷெல் சத்தம் கேட்க மனம் ஒரு தரம் அவனைச் சுற்றிவரும். பூனைகுறுக்கே போனால் கூட பயம். என்ன கெட்ட செய்தி வரப்போகு

னை, இனி எங்கே காணப் போகிறேன். அந்தப் பிஞ்சு உடலை ரவைகள் சல்லடை போட்ட நேரம் என்னை நினைத்தானோ, எதைச்சொல்லத்தவித்தானோ, உயிர் பிரியும் நேரம்வலிக்குமாமே. என்ற செல்லம் எப்படித்துடித்தானோ. இனி எங்கே இப்படியொரு பிள்ளையை காணப்போகிறோம். எதையெல்லாமோ நினைத்து புலம்பினோம். மனம்தான் ஆறவில்லை.

அவனையும், அவனது தோழர்கள் மூவரது உடல்களையும் பூக்கள்அலங்கரித்தவாகனத்தில், மக்கள் மலர் தூவி கண்ணீர்அஞ்சலி செலுத்த, இறுதி ஊர்வலம் அனுப்பி

ந்தது உதவியாக இருந்தது. அக்கா எக்காரணம் கொண்டும் கிளம்ப மறுத்துவிட்டாள் அசோக்கும், அத்தானும் வாழ்ந்த வீட்டில தான் தன்ர காலம் முடியுமென்று பிடிவாதமாக இருந்துவிட்டாள்.

இதோ 10 வருஷங்கள் கண்ணை மூடிக்கொண்டு பறந்துவிட்டது தமிழில் மழலை பேசிய ஆரணி, தமிழை மறந்து. தமிழில் கதைப்பதுகூட அவமானம் என்ற நிலைக்கு வந்துவிட்டாள். அதாவது என்மகள் வளர்ந்து விட்டாள். அவுஸ்திரேலியாவில் காலடி வைத்த ஆரம்பகாலத்தில், தூக்கத்தில் கூட பெரியம்மாவையும் துவாரகாவையும் நினைத்த

கேட்க எனக்கு பெருமையாக இருக்கும். மேலும் பேசமாட்டாளா என்றதைப்போல, இப்ப ஆங்கிலத்தை நிறுத்தி தொலைக்கமாட்டாளா என்று மனம் தவிக்கிறது. எத்தனை **Mind your own bus-ness I don't care** களைக் கேட்டிருப்பேன். தான் நினைச்சது தான் சட்டம். உடுப்புகள் கூட, ஒவ்வொரு வருஷமும் கொஞ்சம் கொஞ்சமா மேலேறி, இப்ப மினியில் நிற்கிறது. இதையும் எதிர்த்தால் எங்கே அதுவுமில்லாமல் போய்விடுமோ என்று பயந்து நான் வாயே திறப்பதில்லை. நினைத்த நேரம் வீட்டிற்கு வருவாள், போவாள், ஏனென்று கேட்க முடியாது. எந்த நேரமும் ஆங்கில இசையால் வீடு

என்னால, இவளைப்பற்றி பெருமையாக நானென்ன எழுதுவேன். துவாரகா பற்றி சொன்னால், தோளைக் குலுக்கியபடி **That is Duwaraka This is Arani** என்று ஆங்கிலத்தில **Style** ஆக சொன்னாள் என்றா எழுத முடியும். எதை எழுதுவேன். எல்லாமே என்னால் வந்தவினை.

அசோக்கை பார்க்கிறேன். இந்த ஆரணி புலிக்கு போகுமென்றே சின்னம்மா பயந்தனீங்கள், அவன் சிரிக்கிறான். என்னுடைய சுயநலத்தை குத்திக்காட்டுவதுபோல, பெருங்குரலெடுத்து சிரிக்கிறான்.

[6ஆம் பக்கம் பார்க்க]

# உணர்வுகளைச் சுமந்து வரும் 'காலம் எழுதிய வரிகள்'

" புழுதிப் பூச்சு படிந்த
' பூட்ஸ் காலால் '
எரிந்த கட்டைகளை விலக்கி
பாதை செய்து நிமிர
தோளிலிருந்து நழுவும் துப்பாக்கி
என் மனம் போல கனக்கிறது."

## ஒரு மனப் பகிர்வு

'சீறும்
துப்பாக்கியின் பின்னால் - என் உடல்
சின்னாபின்னப்பட்டுப் போகலாம் - ஆனால்
என் உணர்வுகள் சிதையாது
உங்களைச் சிந்திக்க வைக்கும்!'

வெளிச்சத்திற்காக விழித்திருந்துஅத்தாகத்துடன் விரைந்துசென்று வீரச்சாவடைந்த கப்டன் வானதியின் கவிதை வரிகள் இவை.

உயிரிலிருந்து எழுத்தாக மலர்ந்த வரிகள், உணர்வுத் துளிகளாய் வெள்ளைத் தாள்களை நிரப்பிய வரிகள்.

இவைதான் 'காலம் எழுதிய வரிகள்',

தமிழ்த்தாய் வெளியீட்டகம் சமீபத்தில் வெளியீடு செய்த இந்தக் கவிதை நூலில் 51 கவிஞர்களின் 54 கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது - இக்காலத்தின் கர்ப்பத்தில் கருக்கொண்ட நூல். சமகாலச் செய்திகள்... அதன் அக-புற ரீதியிலான உணர்வுகள் இத்தொகுப்பில் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

19 இளங் கவிஞர்களின் கவிதைகள் இதில் உள்ளன. 13 பெண் கவிஞர்கள் கவிதை படைத்துள்ளனர். பெருமைப்பட வைக்கும் செய்திகள்.

'பத்துத் தடவை பாடை வராது
பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா
செத்து மடிதல் ஒரேஒரு முறைதான்
சிரித்துக் கொண்டே செருக்களம்வாடா'

- எனமுதல் கவிதையிலேயே கவிஞர் காசி ஆனந்தன் எம்மை அழைக்கின்றார்.

அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு-அழுதுகொண்டும் தொழுதுகொண்டும் தமிழ்இனம் சாக வேண்டுமா? தலைநிமிர வேண்டாமா எனக் கேட்கின்றார்.

'என் இனிய திலீபனே!
நிம்மதியாய்த் தூங்கு
நிலம் வெடிக்கப் போகிறது
காற்றே நீ மூசு
கடலலையே பொங்கி எழு
கூற்றுவனா?
அவனைக் கொண்டுவந்து தூக்கிலிடு!

கவிஞன் தீர்க்கதரிசிதான்நிலம் வெடித்து விட்டதே. எதுநீதி-தர்மம்எனகாலம்சொல்லிவிட்டதே.

கவிஞர் புதுவை இரத்தினதுரை பாடிய வரிகள்... யதார்த்தத்தைப் பேசிவிட்டன.

தேசிய இனப்பிரச்சினை சார்ந்த பல கவிதைகள் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நெஞ்சைப் பிளந்து நெருப்பை பூசும் வரிகள். எமது தேசத்தின் செய்திகள். ஒவ்வொன்றும் கலைச் சுவையாக மிளிர்கின்றன.

ஒரு தசாப்த காலத்திற்குள் எமது மண்ணில் நிரந்தர விடியலுக்கான போராட்டம் தீவிரப்பட்டது. இக் காலத்திற்குள் பேனா பிடித்த இளங் கவிஞர்கள், இரத்தமும் சதையுமாக போராட்டத்தின் நாடித்துடிப்பை நன்கு உள்வாங்கியுள்ளனர்.

'நட்ட நடு நிசியில்
நாய்கள் குரைத்தால்-
முற்றத்து வேம்பின்
கிளையொன்று - காற்றிலே துவண்டு
ஓட்டிலே இடித்தால்
துணுக்குற்று விழித்து-திருடனோ என்று
திகிலுடன் எழுந்து. வீட்டினைக் காப்பதில்
விழிப்பினைக் காட்டு - ஆனாலும்
நாட்டினைக் காப்பதில்
இன்னுமேன் இல்லை?'

அர்த்த முள்ள கேள்வி ... மனதின் ஆழத்திலிருந்து பேனா வழியாக கொட்டுப்பட்ட வரிகள்.. ஏன் இந்த முரண்?

இது உன் தேசம்.. உன் சுவாசத்திற்கு காற்றை வழங்குவது இந்த தேசம். உன் பாடலை சுமந்து திரிவது இந்த தேசம்... ஏன் இந்த தேசம் உன் சிந்தனையிலிருந்து நழுவிப் போகிறது? செ. பொ. சிவனேசுவின் வரிகள் நியாயம் கேட்குன்றன.

எமது மகிழ்ச்சி, காயம், கண்ணீர், அழிவு, வெற்றி, தியாகம், சாதனை, எழுச்சி என இந்த மண்ணின் சமகால நிகழ்வின் சகல உணர்வலைகளுக்குள் இக் கவிதைகள் எம்மை வாரி இழுத்துச் சென்று சிக்க வைக்கின்றன.

சில கவிதைகள் - வெண்மேகம் மாதிரி... மென்மையாய்... மிக மென்மையாக... எம்மை ஆகர்ஷிக்கின்றன.

கவிதை இலக்கியத்தில் தமிழீழம் உச்சத்தை தொட்டுவிட்டது என்பது பலஅறிஞர்களின்கருத்து. அதைமெய்மைப்படுத்துகிறதுகாலம்எழுதியவரிகள்.

- வவுனியா திலீபன்

# இலக்கைத் தேடி....

எதிரியவன்
இலக்கைத் தேடி
பயணங்கள் தொடரும்...
பெரிய வெடியோசை
தேசத்தை உலுக்கிவிடும்
உலகம் வியக்கும்...
இலக்குத் தேடியவர்களின்
சாவுகள் சரித்திரங்களாகும் ...
உண்மைகள்
எங்கள் ஆழ்மனங்களில்
மௌனமாகப் புதையும்
எங்கள் கண்களில்
நீர்க் கீறல்
சில நிமிஷ நேரத்தில்
அதுவும் மறையும்
தேச விடுதலையே
நெஞ்சில் நினைவாய்... கனவாய்...
உறுதியாய்... நிற்கும்!

க. பூவேந்தன்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை வெற்றியின் பின்னணியில் இருந்தது என்ன?

அண்மையில் வெளியான ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொடுத்தன் மூலம் தனது பாடசாலையின் பெயரை உலகறியச் செய்து பெருமைப் படுத்தி நிற்கிறான்செல்வன் நகுலேஸ்வரம்பிள்ளை ஜசீவன்.

தமது மாணவர்களை அகில இலங்கை ரீதியில் முதல்தர மாணவனாக சித்தியடைய வைக்க முடியாது பிரபல பாடசாலைகள் திணறிக்கொண்டிருக்கையில் கவனிப்பாரற்று, அடிப்படை வசதிகள் கூட இன்றி ஒரு பாடசாலை- ஒரு மாணவனை- அகில இலங்கை ரீதியாக மூன்றாவது இடத்தைப் பெறவைத்துள்ளமையானது பாராட்டுக்குரியதே.

இலைமறை காயாக இருந்து வரும்இப்பாடசாலையின் திறமைகளை வெளிக்கொணரும்முகமாகவும், இந்தப்பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்பை ஏனையோருக்கு தெரியப்படுத்தும் நோக்குடனும் இந்தப்பேட்டி பிரசுரமாகிறது.

புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தையும் யாழ். மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் பெற்றுக் கொண்ட சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலய மாணவன் ந. ஜசீவனைச் சந்தித்தபோது ...

என்னை யாரும் படி என்று வற்புறுத்துவதும்கிடையாது. அப்பா எந்தவிதக் கட்டுப்பாடும் போடுவதுமில்லை. நானாக விரும்பிப் படிக்க மேசைக்குப் போனால் மட்டும் தானும் வந்திருந்து எனக்குப் பாடம் சொல்லித் தருவார். நான் என்னுடன் படிக்கும் பிரசாத்துடன் போட்டி போட்டு படிப்பேன். இருவரும் ஓரிரு புள்ளிகள் வித்தியாசத்திலேயே எப்போதும் இருப்போம்.

பாடசாலையில் அதிபரும் ஆசிரியர்களும் எனக்குத் தேவையான அளவிற்கு பாடங்களைத் சொல்லித் தருவார்கள். பாடசாலை விட்டதும் புலமைப் பரிசில்பரீட்சைக்குத் தோற்றும் எல்லோருக்கும் வகுப்புகள் நடக்கும்.

பரீட்சைக்கு என்ன மாதிரியான கேள்விகள் வரும், எப்படி அதற்கு பதில் எழுத வேண்டும் என்பன பற்றி எல்லாம் ஆசிரியர்கள் எங்களுக்குச் சொல்லித் தருவார்கள். தினமும் பாடசாலை விட்டதும் இருமணித்தியாலங்கள் நின்று அதிபரும், ஆசிரியர்களும் எமக்கு படிப்பித்தார்கள். வகுப்பிலே குறைவாக எடுக்கும் மாணவர்களுக்கு தனியாக வைத்து சில ஆசிரி

விற்கு பிற்காலத்தில் நல்லாய் இருக்கலாம் என்று.

நான் பாஸ் பண்ணினது எனக்கு சரியானசந்தோஷம். அதற்கு காரணமே எங்கள் ஆசிரியர்கள் தான். இனி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குப் போகப் போகிறேன். அங்கே தான் ஆண்டு ஆறிலிருந்து படிக்கப் போகிறேன் என்றார்.

பாடசாலை விடுமுறை நாளாகையால் உழைத்து மிகவும் சோர்வுடன் காணப்பட்ட அதிபர் திரு. இ. கணேசராஜா அவர்களைச் சந்தித்தோம். அன்புடன் வரவேற்ற அவர்'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்பார்கள். நாம் எமது கடமையைச் செய்தோம். அதற்குரிய பலன் இன்று கிடைத்துள்ளது. யாழ் மாவட்டத்திலேயே முதலாவதும் மூன்றாவதும் அதிகூடிய புள்ளிகள் எமது பாடசாலைக்கே கிடைத்துள்ளதாக அறிகிறேன். செல்லத்துரை பிரசாத் என்ற எமது மாணவன் 181 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இம்முறை மொத்தமாக 64 பிள்ளைகள் பரீட்சைக்கு தோற்றினார்கள். மற்றைய பாடசாலைகளைப் போன்று நாம் மாணவர்களைத் தேர்வு செய்து அனுப்புவதில்லை. வயதுக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட அனைத்து மாணவர்களையும் அனுமதித்தோம். இம்முறை ஏழு மாணவர்கள் எமது பாடசாலையிலிருந்து சித்தியடைந்துள்ளனர்.

கடந்த வருடங்களிலும் எமது பாடசாலை மாணவர்கள் சிறந்த முறையில் சித்தியடைந்துள்ளனர். 90இல் 11 பேரும், 91இல் 6 பேரும், 92 இல் 14 பேரும், 93 இல் 2 பேரும் சித்தியடைந்தனர். 91 இல் நடந்த விசேட பரீட்சையில் எமது கல்லூரிக்கு 187 புள்ளி கிடைத்தது.

சாலையில் தளபாட வசதிகளோ, போதிய ஆசிரியர்களோ கிடையாது. ஏழு ஆசிரியர்கள் மட்டுமே யுள்ளனர். கல்வித்திணைக்களத்தை விட பெற்றோரும் அபிவிருத்திச் சபையினரும் போதியளவு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இப்பாடசாலையின் வளர்ச்சியில் பெரும்பங்கு அவர்களுடையதே. ஆசிரியர் பற்றாக் குறையை தீர்க்க கல்வித்திணைக்களம் இன்று வரை முன்வராத போதிலும் இவர்கள் தாமாக முன் வந்து நான்கு ஆசிரியர்களை தந்துள்ளார்கள். அவர்களுக்கான சம்பளத்தையும் இந்த அபிவிருத்திச் சபையினரே வழங்கி வருகின்றனர். இடப்பிரச்சினையைக் குறைத்துக் கொள்ளும் பொருட்டு ஓர் தற்காலிகமான கொட்டிலையும் அமைத்துத் தந்துள்ளார்கள். கல்வி வளர்ச்சிக் கழகமும் மூன்று ஆசிரியர்களை தந்துள்ளார்கள்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் தமது உடைமைகளை இழந்து அகதிகளாகிய போது அந்த சிறார்களை சேர்த்துக் கொள்ள எந்தவொரு பாடசாலையும் முன்வரவில்லை. இந்நிலையில் இடப்பிரச்சினை, ஆசிரியர் பற்றாக்குறை இருந்த போதிலும் நான் அவர்களைச் சேர்த்துக் கொண்டேன். இங்குள்ள மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் இடம் பெயர்ந்தவர்களாகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களாகவுமேயுள்ளனர்.

பாடசாலை சுற்றாடலில் இருப்பவர்களும் பெற்றோரும் இந்த பாடசாலையின் வளர்ச்சிக்கு தங்களாலான சகலவித உதவிகளையும் செய்துவருகின்றனர். பெற்றோர்தின விழா மெய்வல்லுநர் போட்டிகளின் போது

என நாம் எதிர்பார்க்க முடியும்?

ஆரம்பக்கல்வி கற்பித்தல் சிறப்பாக அமையவேண்டுமானால் அதனை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படல்வேண்டும் அப்படியான நிலை தோன்றினால் இக்கல்வியும் சிறப்பாக அமைந்துவிடும். இவ் ஆரம்பக்கல்வி உரிய முறையில் வழங்கப்படாது விடின் மாணவர்களது எதிர்காலமே பாழடைந்துவிடும் என்பதை



அகில இலங்கையில் மூன்றாம் இடத்தைபெற்ற ஜசீவன்

நாம் அனைவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

கல்வியுடன் சேர்த்து மாணவர்களின் பிற ஆற்றல்களும் வளர்க்கப்படல் வேண்டும். அவர்களிடம் காணப்படும் ஆற்றல்களை இனம் கண்டு நாம் ஊக்கமளிக்க வேண்டும். ஆண்டு ஐந்திலிருந்து மாணவன் ஆண்டு ஆறிற்கு புதிய பாடசாலைக்கு செல்லும் போது ஏதோ ஓர் துறையில் விடப்படுகிறான். அழகியல் மற்றும் ஆக்கத்துறைகள் கீழ் வகுப்பில் இருந்தே புகுத்தப் படல்வேண்டும். இல்லாவிட

த்துக்களைப் பரிமாறிக் கொண்ட போது ..

பதினைந்து மாணவர்கள் சித்தியடைவார்கள் என எதிர்பார்த்திருந்தோம். அது நடக்காத போதிலும் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தைப் பெற்றதன் மூலம் எதிர்பாராத பெருமையைப் பெற்றுத் தந்திருக்கிறார் ஜசீவன். இவருக்கு அடுத்த படியாக பிரசாத் இடம் பெறுகிறார். இவர் களிருவருமே சகலதுறைகளிலும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல, ஜசீவன் 190 புள்ளிகளைப் பெறுவார் என எதிர்பார்த்திருந்தோம். கணிதத்தில் அவருக்கு நூறு புள்ளிகள் கிடைத்திருந்தது என்றார் ஓர் ஆசிரியர் ஜசீவன் ஓர் சகலகலாவல்லவன் விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கு சிறந்த உதாரணமாகத்திகழ்கிறார். கல்வியில் எவ்வளவு ஊக்கமுடன் செயற்படுகிறாரோ அதே அளவிற்கு ஏனைய துறைகளிலும் சிறந்த மாணவனாக விளங்குகிறார். விளை

கிறோம். ஆண்டு மூன்றிலேயே இவர்களுக்கான அத்திவாரத்தை இட்டுவிடுகிறோம். இடப்பிரச்சினை பெரும்பிரச்சினையாக இருப்பதால் கூடுதலான மாணவர்களை ஒன்றாக இருத்தி கற்பிக்க வேண்டிய ஓர் நிலை காணப்படுகிறது. இப்படி சிறிய மாணவர்களைவைத்து கற்பிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. இவர்களைத் தனிப்பட்டமுறையில்கவனிக்கவோ, மெல்லக்கற்கும் மாணவர்களை இனம் கண்டு ஊக்குவிக்கவோ முடியாதுள்ளது. எமது மாணவர்கள் கடும் மழையில் நிலத்தில் இருந்தே தவணைப் பரீட்சை எழுதினார்கள். மாணவர்கள். கற்பதற்கேற்ற சூழல் அமைய வேண்டும். இப்படியான சூழ்நிலையிலும் கூடஎமது மாணவர்கள் இருவர் அண்மையில் நடந்த முதனிலை பரீட்சையில் 462 புள்ளிகளைப் பெற்றனர் என்பதைச் சுட்டிக்காட்டவிரும்புகிறோம் கோட்ட மட்டத்தில் நடக்கும் சகல போட்டிகளிலும் எமது பிள்ளைகளும் பங்குபற்றுவார்கள். ஆங்கில பேச்சில் ஜசீவனுக்கு முதலிடம் கிடைத்தது.

குழுநிலைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறும் மாணவர்களுக்கு தனிப்பட்ட பரிசில்களோ சான்றிதழ்களோ வழங்கப்படல் வேண்டும். பொதுவாக கேடயமோ வெற்றிக்கிண்ணமோ வழங்கப்படும் போது அது பாடசாலைக்குரியதாகிறது. இதனால் பங்குபற்றிய மாணவர்களை ஊக்குவிக்க முடியாது இதனால் அவர்கள் உற்சாகம் இழந்து காணப்படுவதை காணமுடிகிறது. என்கிறார் வேதனையின் வெளிப்பாட்டுடன் ஓர் ஆசிரியை.

விளையாட்டுத்துறையிலே அவருடைய தந்தையே விரும்பி சேர்த்துக் கொள்வார் பாடசாலையுடன் அவரது உறவு மிகவும் நெருக்கமானது பாடசாலையின் சகல நடவடிக்கைகளிலும் விருப்புடன் பங்கு பற்றுவதுடன் வளர்ச்

**சசிகரன்**

சிக்கும் பெரும் பங்காற்றி வரு

கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து செல்வதை எண்ணி வேதனையடைகிறேன். 1992 இல் அகில இலங்கைரீதியில்199 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தை எமதுமாணவர்கள் பெற்றிருந்தனர். இன்று அந்த நிலை மாறியுள்ளது. இது வீழ்ச்சிப் போக்கையே காட்டி நிற்கிறது.

பிள்ளைகளை எந்தநேரமும் படி, படி எனப் பெற்றோர்கள் வற்புறுத்துவதையும் அழுத்தம் கொடுப்பதையும் நிறுத்தி அவர்களை சுயமாக சிந்தித்து செயலாற்ற விட வேண்டும். வேண்டுமானால் அவர்கள் ஓர்வழிகாட்டியாக இருக்கலாம். எனது பிள்ளையை நான் படி என கூறியதும் கிடையாது. கண்விழித்து படிக்கவிட்டதும் கிடையாது. தினமும் மாலையில் இருமணி நேரம் மட்டுமே அவர் இருந்து படிப்பார் அந்நேரத்தில் அவர் அருகில் இருந்து அவரது கல்விக்கு உதவுவேன். மாறாக தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பி விசேடமாகக் கற்பித்தது கிடையாது. பாடசாலையிலே அதிபரும் ஆசிரியர்களும் மேலதிக கல்வியையும் புகட்டி வந்தார்கள் எனது மகனிற்கு கிடைக்கும் புகழ் அவர்களுக்குரியதாகவே கருதுகிறேன்.

விளையாட்டு துறையிலே பிள்ளைகள் ஈடுபடுவதால் கல்வி பாதிக்கப்படும் என நினைக்கும் பெற்றோருக்கு எனதுமகன் ஒரு எடுத்துக்காட்டாகவுள்ளார். அவர் எந்தநேரமும் எந்த துறையில் ஈடுபடவிரும்பினாலும் நானும் சேர்ந்து ஊக்கமளித்து வருவேன். இது விளையாட்டிலும் சரி ஏனையகல்வி நிகழ்ச்சிகளிலும் சரி. இம்முறை எமது வீட்டுக்கு அருகில் இருக்கும் சனசமூக நிலையத்தில் சில நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அதற்கு நான் மகனை கூட்டிச்சென்றேன். அங்கே கிறீஸ் கம்பத்தில் ஏறும் போட்டியும் நடைபெற்றது. அண்மையில் நடந்த புலமைப் பரிசில் பரீட்சை தமிழ் வினாப் பத்திரத்தில் கேட்கப்பட்ட கட்டுரையில் இதுவும் ஒன்றாக அமைந்துவிட்டது இதனால் மகன் சுலபமாக கட்டுரையை தானாகவேஎழுதக்கூடியதாக இருந்தது. கடந்தகால பரீட்சைகளை கவனிப்பின் இயற்கைக்காட்சிகளை உள்ளடக்கிய கட்டுரைகளே வருவதை அவதானிக்க முடிகிறது. இவற்றை மாணவர்களுக்கு வகுப்பறையில் வைத்து விளக்கிக் காட்ட முடியாது. எனவே பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்யவேண்டும். இது மாண

**பிள்ளைகளை எந்த நேரமும் படி, படி என பெற்றோர் அழுத்தம் கொடுப்பதை தவிர்த்து தாம் உடனிருந்து ஊக்கமளிக்க வேண்டும். நிறைய கதைப்புத்தகங்களை வாசிக்க விட வேண்டும். இதன் மூலமே பிள்ளைகளின் மொழியாற்றல், சொல்லாற்றல், கற்பனா சக்தி என்பன வளர்ச்சி அடையும்.**

**- ஜசீவனின் தந்தை**

எடுக்கும் மாணவர்களுக்கு தனியாக வைத்து சில ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பார்கள்.

இடம்பெயர்ந்த மாணவர்களே கூடுதலாக இருந்தார்கள். மேசை, கதிரைகள் இல்லாமையால் நிலத்தில் இருந்தே படிப்போம். மழை பெய்தால் தூவானம் அடிக்கும். ஈரத்துக்குள் இருந்து கூட படித்திருக்கிறோம். இப்பவும் அந்த நிலைதான் எங்கள் பள்ளிக்கூடத்தில் இருந்து வருகிறது. நாங்களோ ஆசிரியர்களோ அதைப்பற்றி எல்லாம் கவலைப்படுவதில்லை. ரீச்சர் அடிக்கடி சொல்லுவா, நாங்கள் எவ்வளவுக்கு கஷ்டப்பட்டுப் படிக்கிறோமோ அவ்வள

இத்தகைய வெற்றிகள் எப்போதும் தனி ஒருவரைச் சாராது. மாணவனுடைய தனித்திறமை என்றும் எண்ணிவிட முடியாது. இந்த மாணவன் ஆண்டு ஒன்றிலிருந்து இங்கு கற்று வருகிறார். ஆரம்பத்திலிருந்தே இவருக்கு அத்திவாரம் போடப்பட்டுள்ளது. எனவே இவருடைய வெற்றி இவருக்குக் கற்பித்த அத்தனை ஆசிரியர்களையுமே சாரும்.

இங்கு இடப்பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாகவுள்ளது. 445 மாணவர்கள் பயில்கிறார்கள். ஆண்டு ஐந்து வரையுமே உள்ள இப்பாட

தாமும் கலந்து கொண்டு மாணவர்களை ஊக்குவிப்பார்கள்.

இன்றைய கல்வி வீழ்ச்சிக்கு காரணம் ஆரம்பக்கல்வி கற்பித்தல் சிறப்பாக அமையாததே ஆரம்ப ஆசிரியர்களுக்கு உரிய கௌரவம் அளிக்கப்படல் வேண்டும். கல்வி அதிகாரிகளே இவ் ஆசிரியர்களுக்குரிய கௌரவம் கொடுப்பதில்லை. சாதாரண தர, உயர்தர ஆசிரியர்களுக்கு கொடுக்கும் கௌரவத்தை இவர்களுக்கு கொடுப்பதில்லை. அதிகாரிகளே கௌரவிக்காது புறக்கணித்து வரும் போது சமூகம் எவ்வாறு மதிப்பு கொடுக்கவேண்டும்

வகுப்பில் இருந்தே புகுத்தப்படல்வேண்டும். இல்லாவிடத்து ஆண்டு ஆறில் எதை அடிப்படையாகக் கொண்டு மாணவனுக்குரிய துறையை தெரிவு செய்வது? முதலில் சகல துறைகளையும் கற்பித்து பின்னர் அவர்களது திறமைக்கேற்ப, விருப்பிற்கேற்ப சங்கீதம், சித்திரம், நடனம் என துறைகளை தெரிவு செய்ய அனுமதிக்கலாம். இதுவே சிறந்த வழியாகவும் இருக்கும் என்றார்.

மாணவ சமுதாயத்தின் முதுகெலும்பாகத் திகழும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை அன்றைய தினம் ஒன்றாகச் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. அதிபரின் ஒத்துழைப்புடன் அவர்களுடன் சில கரு

துறைகளிலும் சிறந்த மாணவனாக விளங்குகிறார். விளையாட்டு, ஆங்கில, தமிழ் பேச்சு. நாடகம் போன்ற துறைகளிலும்ஈடுபாடுகொண்டவராகவும் முதல் பரிசைத் தட்டிக்கொள்வராகவும் இருந்து வருகிறார். எமது பாடசாலையின் சிரேஷ்ட மாணவ தலைவனாகவும் நிர்வாகத்துடன் ஒத்துப் போகும் தன்மை கொண்டவராகவும் விளங்குகிறார். எந்த போட்டியில் பங்குபற்றினாலும் கோட்ட மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுக்கொள்வார் என்றார் மற்றொரு ஆசிரியர்.

அடுத்துவரும் ஆண்டுகளில் பல மாணவர்களை சித்தி பெறவைக்க முயற்சித்து வரு

சிக்கும் பெரும் பங்காற்றி வருகிறார். இங்கு என்ன நிகழ்வு நடந்தாலும் குடும்பத்துடன் கலந்து கொள்வார். இவருடைய செயற்பாடுகள் ஏனைய பெற்றோருக்கு ஓர் எடுத்துக் காட்டு என்கிறார்கள் ஆசிரியர்களும் அதிபரும்.

அதிபர் அறைக்குள் அமைதியாகவந்து அருகே அமர்ந்து கொண்ட ஜசீவனின் தந்தையான நகுலேஸ்வரம்பிள்ளையிடம் மகனின் பெறுபேறுபற்றிக் கேட்ட போது, எனது மகன் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது பெருமை தருவதாக உள்ள போதிலும் எமது சமுதாயத்தின்

சுற்றுலாக்களை ஒழுங்கு செய்யவேண்டும். இது மாணவர்களை பல வழிகளிலும் முன்னேற்றுவதற்கு உதவும். இன்றைய கல்விக்கு கற்பனை வளமே அவசியமாகிறது. மாணவர்களின் மொழியாற்றலை வளர்ப்பதற்கு நிறைய புத்தகங்களை வாசிக்க விடவேண்டும். சிறிய சிறிய தரமான கதைப்புத்தகங்களை தேர்ந்தெடுத்து பெற்றோர் கொடுத்து ஒத்துழைக்கவேண்டும். கதைப்புத்தகங்களை வாசிப்பது மாணவர்களை பாழடிக்கும் என்ற தப்பான கருத்தை பெரும்பாலான பெற்றோர்கள் கொண்டிருப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றார்.

# ஆக்கபூர்வமான சிந்தனை அடிப்படையில் கல்வி வழி நடத்தப்படவேண்டும்


**சுப்பிரமணியம்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்


இன்று ஆசிரியவாண்மை விருத்தி எனும் பெயரில் ஆசிரியர்கள் அர்த்தமற்ற தொடர் கல்விக்கு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இதனை ஊக்குவிக்குமாப்போல பல்கலைக்கழகங்களும், கல்விமான்களும் கண்ணை மூடிக் கொண்டு இருப்பது ஆக்கபூர்வமானதல்ல. தற்சமயம் மேற்கொள்ளப்படும் அர்த்தமற்ற கல்விக்கான செலவும், நேர விரயமும் எவ் விதத்திலும் மாணவருக் குதவப்போவதில்லை. ஆனால் மாணவர் கல்வி பெறுபேற்றை உயர்த்துவற்கு ஆசிரியருக்குத் தொடர்கல்வி அவசியமான இவ்வேளையில் இவ்விரயம் வீண்விரயமும், மீளாய்வு செய்யப்பட வேண்டியதுமாகும்.

**ஆசிரியருக்கு எவ்வாறான தொடர்கல்வி அவசியமாகிறது?**

தற்சமயம் ஆசிரியர் சேவையில் உள்ளோரை இரு வகையில் பிரிக்கலாம்.

1- பட்டதாரிகள்
2- பட்டதாரிகள் அல்லாதோர்.

பட்டதாரிகளைப் பொறுத்தளவில் தமது தொழிலையேனும் கெட்டித்தனம் மிக்கதாக்க - கல்வி கற்பித்தல் தொடர்பான நுட்பங்கள் மிக முக்கியமாகின்றது. இதற்கு உதவக்கூடிய வகையில் கல்வி -டிப்ளோமா பயிற்சி பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகின்றது. முறைக் கல்விப் பாடசாலையில் ஆண்டு 13 வரையே இவ்வாசிரியர்களின் பணி பரந்துள்ளது. பட்டம்பெற்ற எவரும் அவ்வகுப்பையும் தாண்டிச் சென்று மேலும் 3 ஆண்டு பல்கலைக் கல்வியைப் பெற்று பட்டத்தைப் பெற்று வருபவர்கள் பாட அறிவைப் பொறுத்தளவில் -காலத்துக்குக் காலம் கல்வியில் ஏற்படும் விருத்திக்கு அமையவும், பாடவிதான மாற்றங்களுக்கு அமையவும் அவர்களுக்குப் பயிற்சி அவசியமாகின்றது. இப் பயிற்சியை திணைக்கள மட்டத்தில் சேவைக்காலப் பயிற்சி எனும் திட்டத்தின் கீழ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான பயிற்சிகள் மிக அவசியமானவையே.

**ஆசிரியரின் கெட்டித்தனம்**

ஒரு ஆசிரியரின் கெட்டித்தனம் எதனில் தங்கியுள்ளது எனில்; ஆசிரியர் கற்பிக்கும் மாணவர் குழுவில் உள்ளயாவரையும் அவர்கள்அடையவேண்டிய குறிக்கோள்களை அடையச் செய்வதிலேயே தங்கியுள்ளது. இன்றைய ஆசிரியர்கள் இவ் வரைவிலக்கண அடிப்படையில் மிகவும் பின் தங்கியேயுள்ளனர் என்பதை தேர்வுப் பெறுபேறுகள் வெட்ட வெளிச்சமாகக் காட்டுகின்றன. நாளாந்த வாழ்வில் பிள்ளைகள் தமது பிரச்சினைகளை விடுவிக்க முடியாமல் அலைவதும் திருப்தியற்ற பெறுபேறாகவுள்ளது.

இந் நிலையில் இன்றைய ஆசிரியருக்குமிக அவசியம் தேவைப்படுவது அவர்களது தொழிலைச் சிறப்புறவும் பயனுள்ளதாக்குவதற்கும்; மாணவர் யாவரையும் ஆகக் குறைந்தது சித்தியடையச் செய்வதற்கான கற்பித்தல் நுட்பம் தெரிந்தவர்களாக்குவதே. அதற்கான தொடர் கல்வியே அவர்களுக்கு வழங்குவதற்கு உயர் கல்வித்தாபனங்கள் முன் வரவேண்டுமேயன்றி வேறெதுவும் பெயரின் பின்னால் சில எழுத்துகளை சேர்த்துக் கொள்ளுதல் என்பது ஆசிரியர் சம்பள உயர்வுக்கு உதவுமேயன்றி மாணவருக்குப் பயன்தராதநிலையே இன்றுண்டு உயர் தகைமைகள் மட்டும் ஆசிரியத் தொழிலுக்கான உயர் கெட்டித்தனமாகக் கொள்ள முடியாது. ஏனெனில் உயர் பட்டங்களைப் பெற்ற ஆசிரியர்கள் பலர் மாணவருக்கான கற்பித்தலில் தோல்வி கண்டுள்ளதை அவதானிக்கின்றோம். அதே வேளை அவரிலும் குறைவான தகுதி மிக்க பலர் சிறந்த ஆசிரியராக மிளிருவதும் கண் கூடு. எனவே பட்டதாரி ஆசிரியர்கள் தமது உயர் கல்வியைத் தொடர்வது மாணவர்களுக் குதவுவதாயின் அது கற்பித்தல் நுட்பம் சார்ந்ததாக அமைவதே சாலப் பொருத்தமாகும். பட்டமாணியைப் பெறுவதற்குத் தேற்றிய 4 பாடத்தைத் தவிர ஏனைய எந்தப் பாடத்தையும் O/L வகுப்பு வரை கற்பிக்க முடியாது என ஒதுங்கி ஒய்வெடுக்கும் பட்டதாரிகள் பலரை நாம் காண்கின்றோம். க.பொ.த.சாதாரண தரம் வரையில் அதே பட்டதாரிகள் படித்து சித்தியடைந்து உயர்தர வகுப்புக்குச் சென்று பட்டம் பெற்றவர்கள் பின்னர் அதே சாதாரணதரவகுப்புக்குரிய பாடங்களைக் கற்பிப்பதற்குத் தம்மை ஆயத்தம் செய்ய முடியாது என ஒதுங்கும் நிலை பரிதாபத்துக்குரியது. இங்கு பட்டமாணி நெறியில் கற்ற பகுக்கும், தொகுக்கும், விளக்கும் ஆற்றல் எவ்விதத்திலும் பயன்படா நிலையே காண்கிறோம். கல்வியில் பொதுவாக ஒரு கொள்கையுண்டு குறிப்பிட்ட துறைகளில் பெற்ற திறன்கள்- தேவைக்கேற்ப மாற்றப்படக் கூடியன வென்று. ஆனால் இங்கு அக் கொள்கை பயன்படா நிலையில் உள்ளது கற்பித்தலில் உள்ள குறையா கற்றலில் உள்ள குறையா? என யோசிக்க வேண்டியுள்ளது. நிச்சயம் அது கற்பித்தலிலும், கற்றலிலும் உள்ள குறையேயன்றி வேறேதுவும் இல்லை.

**பட்டதாரிகள் அல்லாத ஆசிரியருக்கான தொடர் கல்வி**

பட்டதாரிகள் அல்லாதோர் பின்வரும் துறைகளில் ஆசிரியராகவுள்ளனர். ஆரம்பக் கல்வி சமயம், தமிழ், சமூக

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்கபூர்வமான

வியல், நடனம், சங்கீதம், சித்திரம், தொழில்நுட்பம், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் விசேட தேர்ச்சி பெற்றவர்களாகவும் இப்பாடங்களுக்கெனத் தெரிவு செய்யப்பட்டவர்களுமாகவுள்ளனர்.

இவர்களில் ஆசிரியர் பயிற்சி பெறாதோருக்கு அவசியம் தேவைப்படுவது தொழில் முறைசார்ந்த உள்ளக/தொழில்கல்வி முறையிலான ஆசிரியர் பயிற்சியே. ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களுக்குத் தேவைப்படுவது

1 - கல்வியியல் பட்டமானி

2 - ஒவ்வொருவரும் கற்ற விசேட கல்வித் துறையில் உயர்கல்வி.

**இன்று நடப்பதென்ன ?**

விசேட பாடங்களுக்கென தெரிவான ஆசிரியர்கள்- இன்று G.A.Q தேர்வுக்கும்- கலைபட்டமானிக்கும் தம்மைப் பதிவு செய்து கொண்டு- தாம் கற்பிற்கும் பாடங்களைவிட்டு இந்து நாகரிகம் இந்து சமயம், கிறிஸ்தவ சமயம், சமஸ்கிருதம், பாளி, அளவையியல், பொருளியல், புவியியல் என்று தமது தொழிலில் வாண்மைவிருத்திக்கு அவசியமற்றதும்-தொடர்பற்றதுமான பாடங்களைத் தெரிந்து கற்கப் பாடசாலை நாட்களை விடுமுறைகளாக்கி மாணவர்களுக்கு வகுப்புகளை எடுக்காமல் திரிவதும் வார இறுதி நாட்களில் எவ்வித பாட ஆயத்தமோ இதே பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடாமலிருப்பதும் சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளிலீடுபடாமல் தொடர் கல்வியென அலைவதும். யாவரும் அறிந்த விடயமாகும். முடிவு என்னவென்றால்;

1- பட்டத்தைத் தேடிக் கொண்ட ஆசிரியர் தாம் தெரிவுசெய்யப்பட்ட பாடத்துறையை விட்டு விலகி உயர் கல்வி வகுப்பில் கற்பிக்க வேண்டுமென அடம்பிடிப்பதும் இதனால் கீழ்வகுப்புகளிலும, விசேட துறையில் கற்பிக்க ஆசிரியர்கள் பற்றாக்குறை யாவதுமேயாகும். இதனால் மாணவர் கல்வி பாழாவதுமாகும். (2,00,000 மாணவர்-க.பொ.த.சா. தரவகுப்புகள் யாழ். மாவட்டத்தில் உள்ளனர்) அதே வேளை மிகவும் குறைந்தளவு (9000 மாணவர்கள்) மாணவர்களைக் கொண்ட உயர்வகுப்புகளுக்கு அளவுக்கதிகமான ஆசிரியர்கள் சேவையாற்ற முண்டியடிப்பதுவுமேயாகும் கடைசியில் தேர்வுப் பெறுபேறுகள் 50% தாண்டுவதுமில்லை, பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகுபவர்கள் 400க்கு அதிகமாவதுமில்லை.

பட்டம் பெற்ற ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி வகுப்புகளில் கற்பிப்பது தமது தகைமைக்குக் குறைவானதாகக் கருதும் மிக மோசமான மனப்பாங்குடையவர்களாகவிருப்பதும் உயர்கல்வியின் பொருத்தப் பாடின்மையையே காட்டும்.

ஆரம்ப வகுப்புகளுக்கான ஆசிரியர்களே மிக அதிக எண்ணிக்கையில் வேண்டப்படுபவர்கள். அதேவேளை மிகுந்த ஆயத்தம் செய்து அதிஉயர் கற்பித்தல் நுட்பத்தைப் பிரயோகித்து உயர் பெறுபேறுகளுடன் யாவரையும் சித்தியடையச்செய்ய வேண்டியவர்கள் ஆசிரியர்கள். ஆனால் இவ் ஆரம்பவகுப்புகளிலிருந்து பின்வாங்கி சிறந்த கற்பித்தல்நுட்பத்தைப்பிரயோகிக்காமல் வெறும்விரிவுரை முறையான கற்பித்தல் நுட்பத்துள்புகுந்ததும் கல்விவீழ்ச்சிக்கு ஒரு காரணமென்பதை புரிந்துகொள்ள வேண்டும்,

இதேவேளைஇன்று "கல்விமான்கள்சிலர் சமஸ்கிருதம்படியுங்கள், பாளி படியுங்கள், ஆங்கிலம் படியுங்கள், குறைந்த புள்ளியுடன் பல்கலைக்கழகம் புகலாம்" எனமாணவர்களையும் ஆசிரியர்களையும் தவறான வழி நடத்தல் செய்வது எந்தவிதத்திலும் சமூகத்துக்கும் பொருளாதார விருத்திக்கும் உதவாது.

நாட்டின் வளர்ச்சிக்கு இடையூறான காரணிகள் எவை? எவ்வாறான துறைகளில் ஆளணியினர் தேவைப்படுகின்றனர்? எத்துறைகளில் / பாடங்களில் தேர்ச்சிமிக்கோர் தேவைப்படுகின்றனர் எமது மூலவளங்களைப் பெறுமதிமிக்கதாக்க எவ்வாறான கல்வி தேவை? என்பன போன்ற விடயங்களில் ஆக்கபூர்வமான ஆய்வுகளும், சிந்தனைகளும் அதனடிப்படையில் உயர்கல்வி வழிநடத்தலுமே இன்றைய அவசிய தேவையாகும். யாரோ சில பேருக்கு விரிவுரையாளர் வேலை வாய்ப்பை வழங்குவதற்காக உயர்கல்வி வாய்ப்பல்ல.

எமது நாட்டின் உயர்கல்வித் தேவைகள் என்ன என்பதை ஆராய இன்னும் கல்விமான்கள் முயற்சிக்காதது மிக மனவருத்தப்படக்கூடிய விடயமாகும். அர்த்தமற்ற அல்லது அதிமுக்கியத்துவம் பெறாத பாடங்கள் உயர் கல்வித் துறையிலிருந்து அகற்றி - புதிய அத்தியாவசியமான பாடங்களையும், துறைகளையும், பீடங்களையும் தொடங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதே இன்றைய தேவையாகும். நாம் நாட்டுக்கு நல்லதைச் செய்யாவிடினும் தீயதைச் செய்யாதிருப்பதே மிகச்சிறந்ததாகும் என உணர்வோமாக.

எமது ஆசிரியர்கள் தமது வாண்மையை உயர்த்த முயற்சிக்க வேண்டியது மிக அவசியமாகும். ஆனால் அது அர்த்தமுள்ளதாக விருக்க வேண்டும் சுயநலத்தை விட பொது நலம் அதிகமாக விருக்க வேண்டும் எம் முன்னால் கல்விசார்பிரச்சினைகள் நிறையவுண்டு. அவற்றை விடுவிக்கும் உயர் தொடர்கல்வியே இன்றைய தேவையாகும் உயர் கற்பித்தல் நுட்பங்களைப் பிரயோகிக்காமலும். பொருத்தமான மேற்பார்வை நுட்பங்களைப் பிரயோகிக்காமலும், மாணவர் கல்வியில் வீழ்ச்சி ஏற்படும் போது தற்போதைய போர்க்கால சூழலை எதற்கும் காரணமாகக் கூறித் தப்பிக்க முயல்வது பொருத்தமானதாகாது அதேவேளை பொருத்தமற்ற கற்பித்தல் நுட்பத்தைப் பிரயோகித்துக் கொண்டு மாணவர் சித்தியடையாமைக்குக் காரணமாக பின்தங்கிய மாணவர்களாக அவர்களை வகைப்படுத்தும் பிழையான கல்விக் கொள்கைகளையும், உளவியல் கொள்கைகளையும் போதிப்பவர்களையும் இனங்கண்டு திருத்த வேண்டியுள்ளது காலத்துக் கொவ்வாத கொள்கைகளை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்து சமூகத்தைப் பின்னடையச் செய்யுமிவர்கள் தங்களைக் காலத்துக் கேற்றதாகவும் எமது சூழலுக்கு ஏற்றதாகவும் மாற்றிக் கொள்ள வேண்டியதும் மிக அவசியமாகும்.

பொருத்தமற்ற ஆசிரியர் பயிற்சியைப் பெற்ற ஆசிரியர்கள் மாணவர்களை பின் தங்கியவர்களாக வகைப்படுத்தி அவர்களைப் பின்தங்கவைக்காமல் பார்த்துக் கொள்வதே இன்று பெரும் காரியமாகவுள்ளது.

ஆசிரியர்களும் சரி, ஆசிரியர்களுக்கான பயிற்சியளிப்பவர்களும்சரிதம்மை நிகழ்காலத்துக்கு ஏற்பவும், சமூக முன்னேற்றத்துக் கேற்பவும் இசைவுபடுத்த முயற்சிக்க வேண்டியது மிக அவசியமாகும் இல்லையெனில் எம்மை பின் தங்கவைக்கும் ஆட்சியாளருக்கு பங்களிப்பு செய்தவர்களாவோம். எனவே கல்விமான்கள் இவ்விடயங்களை இட்டு ஆராய்வது மிக அவசிய மன்றோ.

## நடந்துவந்த

என்ரபிள்ளைபோன சரியான பாதையை உணரமுடியாத தால தானே எனக்கிந்த கதி நாற்பது வயசில தமிழ் பண்பாட்டை யோசிக்கும் நானெங்கே! பன்னிரெண்டு வயசில தமிழுக்கு உயிர்விட்ட அவனெங்கே. புதிய கோணத்தில் அவனைப் பார்க்கிறேன். சுயநலமேயற்றதெய்வப்பிறவியாக கோயிலில் உறையும் தெய்வத்திற்கு சமானமாக என்னை ஒரு புழுப்போல உணருகிறேன்.

என்ரை பிள்ளைதப்ப வேணும் என்ற ஒரே நோக்கில் வந்த நான் இந்த பத்து வருஷமும் கண்டதென்ன. அந்நிய மண்ணிலே அந்நியனாக வாழ்ந்து மிஞ்சியதென்ன. கவலையும் துக்கமும்தான். நான் இங்கே வந்தது, இல்லாமல் ஆகிவிடாதா.

காலச்சக்கரத்தைஒரு பத்து வருஷம் பின்னோக்கி தள்ள முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அசோக் என்னை மன்னிப்பாயாடா. இந்த சுயநலப்பேய்க்கு பாவ மன்னிப்பு தருவாயாடா, அவன் எம்முடன் வாழ்ந்த அந்தப் புனிதமான காலத்திலே, விரும்பி முணுமுணுக்கிற பாடல்சாட்டையடியாக என்காதில் ஒலிக்கிறது.

"நடந்து வந்த பாதை
தனை திரும்பிப் பாரடா
நீ நாசவேலை செய்த
பின்னால் வருந்து
வாயடா"

நான் செய்தது தப்பு. பெரியதப்பு. நாங்களிங்கே வந்தி


(G. A. Q. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான)

B. A. Part I

B. Com. Part I

(யாழ். பல்கலைக்கழகம்)

விரிவுரைகள்

ஆரம்பம் - 10 - 12 - 94 (8 மணி)

G. A. Q. - 96

(பேராதனை)

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு :

ஸ்ரீ அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்

(சி-10856)



சமையல் ஒரு கலை

அதனை நாங்கள் உங்களுக்கு நயமுடன் வழி சமைத்துத் தருகின்றோம். எங்களுடன் வந்து உங்கள் கீழைத்தேய, மேலைத்தேய உணவுகளை பகலிலோ அன்றி இரவிலோ பகிர்ந்து கொள்ளுங்கள்.

நிறைவான, சுகாதாரமான, சுவையான மனோரம்மிய சூழ்நிலையில் சமையலைச் சுவைக்க எங்களை சந்தியுங்கள்:

ஜோ. எகட்டனின்

உள்ளூர் விருந்தகம்

ஜெசித்தாரா

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி.

நாங்கள் உங்கள் நாவிற்கு மேலும்



முதலாவது

பிறந்த நாள் வாழ்த்து


## மகனை காணவில்லை

பருத்தித்துறையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பாஸ்கரன் என்பவரை ஒருமாதகாலமாகக் காணவில்லை. திருகோணமலையில் இருந்து நவம்பர் 6ஆம் திகதி பருத்தித்துறை நோக்கி ஒரு தொகைப் பணத்துடன் புறப்பட்ட இவர் இன்னமும் வந்து சேரவில்லை. 31 வயதுடைய இவர் 5'9'' உயரத்தைக் கொண்ட பொது நிறமுடையவர். சித்தசுவாதீனம் அற்ற இவரை கண்டவர்கள் இவர் பற்றித் தெரிந்தவர்கள், தயவு செய்து அறியத்தரவும்.

தொடர்பு: பொ. இரத்தினசிங்கம்
செட்டித் தெரு,
பருத்தித்துறை.

(9866)

## ஓராண்டு பூர்த்தி நினைவு



அமரர் செல்லையா சேனாதிராஜா

தோற்றம்: 02-04-1924 மறைவு: 20-11-1993

திதி:- 09-12-1994

ஆண்டாண்டு காலமாய் அவனியில் எவருடனும்
அன்பாகப் பழகி நின்று
வேண்டாத ஒருவரும் இவ்வுலகில் இல்லையென்று
விருப்பமுடன் யாவருக்கும்
தூண்டா விளக்காகத் தூயவொளிதனைத் தந்து
துன்ப விருளகற்றி நின்றாய்
ஆண்டொன்று பூர்த்தியுறு கின்றயின்னாளிலே
அன்புடன் நினைவு கூர்வாம்.

அம்மன் கோவில் வீதி, கோண்டாவில். மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்,

யதப்பு. நாங்களிங்கே வந்திருக்கவே கூடாது. எங்களிற்கு என்றொரு தேசம் வேணும். எங்கடை கலாசாரம் தலை நிமிர்ந்து வாழ வேணும். என்ர மண்ணில தான் என்னுடைய பிள்ளை வாழவேணும். எங்களுக்கென்று ஒரு தனிப் பெருமை மிக்க வரலாறு, பண்பாடு, தேனினும் இனிய மொழி இருக்கென்று அவள் உணர வேணும். ஆங்கிலம் தெரியுமென்றதை விட என்னுடைய தமிழ், எனக்குத்தெரியும், என்று அவள் பெருமைப்பட வேண்டும். தமிழனாக பிறந்ததற்கு அவள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். தமிழிற்காக போராடி உயிர் துறந்த அந்தப் புனித உ ளங்களின் வீரவரலாறுகளை அவள் தெரிந்து பெருமைப்பட வேண்டும்.

இங்கேயே இருந்து, அவளை உயிரோடு கொல்வதைவிட நாங்கள் வந்த பாதைவழியே மீளவும் தாயகம் போய்விட வேண்டும். எனது முடிவு அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆரணி அழுவாள் ஆர்ப்பாட்டம் செய்வாள் தன் சொந்தக்காலில் நிற்கக் கூடிய வல்லமை இன்னும் வராததாலே அடங்கிவிடுவாள்.

அசோக்கை பார்க்கிறேன். கள்ளமில்லாமல் சந்தோஷமாகச் சிரிக்கிறான்.

ஆரணியும் தமிழ்ப்பெண்ணாக மாறுவாள்.

நீ காட்டிய பாதையில் நடப்பாளடா

மானசீகமாக அவனை கையெடுத்துத்தொழுகிறேன். நான் பண்ணிய தப்பிற்கு பிராயச்சித்தம் தேடப் போகிறேன். எனது அடிமனதில் நம்பிக்கை எனும்சிறு வெளிச்சம், விடிவெள்ளியாக மலருகின்றது. இந்தப் பத்துவருஷ வாழ்க்கையில் முதல் தரமாக நிம்மதி என்னை வந்து தழுவ, மகிழ்ச்சியோடு சிரித்தபடி ஆரணியின் வரவிற்காக காத்திருக்கிறேன்.

# பிறந்த நாள் வாழ்த்து



செல்வி கீர்த்தனா
9 - 12 - 1994

பருத்தித்துறை ஒடக்கரையைச் சேர்ந்த சிதம்பரநாதன் ரோஹினி தம்பதிகளின் செல்வப் புதல்வி கீர்த்தனா தனது முதலாவது பிறந்தநாளை இன்று 9-12-1994 வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் அமைதியாகக் கொண்டாடுகிறார்.

கீர்த்தனாவை அன்பு அப்பா, அம்மா. அம்மம்மா, அப்பம்மா, மணி ஆத்தை, புஸ்பம் ஆத்தை குடும்பத்தினர், யோகம் ஆத்தை குடும்பத்தினர், ஜீவம் ஆத்தை குடும்பத்தினர், சண்முகம் சித்தப்பா, பிரான்ஸில் இருக்கும் யோகன் சித்தப்பா, ஜெகன். சித்தப்பா, தங்கராசா பாட்டா குடும்பத்தினர், ஐயா சகுந்தலா அன்ரா, ராணி அன்ரி குடும்பத்தினர், தங்கராணி அம்மம்மா, ஆசை அம்மா, சித்திமார், அண்ணாமார், அக்காமார், திசை மாமா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பருத்தித்துறை கொட்டடிபிள்ளையார் அருள்பெற்றுபல்கலைகளையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (9861)


நாங்கள் உங்கள் நாவிற்கு மேலும் சுவையூட்டுகின்றோம். எமக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை.

(சி- 10868) (ஜோ. செனித்)



ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா வழங்கி வரும்

வழமையான உணவுப் பார்சல்களை தடையின்றி, தாமதமின்றி முற்பகல் 11.45 மணி முதல் பிற்பகல் 3-30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

விலை விபரம்:

மரக்கறி = 30/=
இறைச்சி = 35/=
மீன் = 45/=

உணவுப் பொதிகளை உங்கள் சட்டைப் பைகளுக்கு ஏற்றவாறும் பொதி பண்ணித் தரப்படும்.
பதிவுகள் முன்கூட்டி ஏற்கப்படும்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி

எமக்கு வேறு கிளைகளோ முகவர்களோ இல்லை.
புதுயுகத்தில் புது உருவம்
ஜெசித்தாரா (சி-10865)



SUTHAN PHOTO

வர்ண நிழற்படங்களை
நவீன முறையில் பிடித்திட
அழைத்து மகிழுங்கள்

சுதன் புகைப்பட சேவை

குரும்பசிட்டி

தற்போதைய முகவரி: மு. சிவசுதன் (குட்டி)
இளந்தாரி கோவிலடி,
(10330) இணுவில்.


அம்மன் கோவில் வீதி, மனைவி, மக்கள், மருமக்கள்
கோண்டாவில். பேரப்பிள்ளைகள்,
(10274) குடும்பத்தினர்.

# 7-ம் ஆண்டு நினைவுதினம்



வீரவேங்கை அன்ரன்
(தியாகராஜா மன்மதராஜா)

தோற்றம் 12.7-1967
வீரச்சாவு 9-12-1987

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வரார் என்று நினைத்தாரோ
- உன் தந்தை
ஏழாண்டு பொறுத்து விட்டேன் போகிறேன்
உன்னிடம் என்று புறப்பட்டு விட்டாரையா.
உங்கள் பிரிவால் நாம் இங்கு தவிக்கிறோம் ஐயா.

அன்ரன் வீதி,
தாவடி தெற்கு, - குடும்பத்தினர்
கொக்குவில். (10309)

# போர் நிறுத்தம் - போக்குவரத்துப் பாதை திறப்பு; அரசு - இராணுவம் கூட்டாக புதிய யுக்தி

போர் நிறுத்தம், போக்குவரத்துப் பாதை திறப்பு, இவ்விரண்டு விவகாரங்களும் இவ்வாரம் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படும் விவகாரமாகவும் ஆராயப்படும் அம்சமாகவும் உள்ளன. இவ்விவகாரங்கள் குறித்து அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெறுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப்புலிகளுக்கும் - அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இம் மாத இறுதியில் ஆரம்பிக்கலாம் என கடந்தமாத இறுதித்தினத்தில் தகவல்துறைஅமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்காவின் அறிவிப்பு வெளிவந்ததில் இருந்து இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் பற்றியவிடயம் அரசியல் அரங்கில் மீண்டும் முதன்மை பெறத் தொடங்கியது-

ஆரம்பத்தில் இச்சமாதானப் பேச்சு அறிவிப்பைத் தொடர்ந்து நத்தார்-புது வருடகாலத்தில் ஓர் போர் நிறுத்த அறிவிப்பை அரசாங்கம் செய்யலாம் என அரசியல் விமர்சகர்கள் ஆரூடம் கூறினர். ஆனால் தற்பொழுது வரும் அறிவிப்புக்கள் அதற்கு முன்னரே தாக்குதலை தவிர்ப்பு நிலை (Cessation of Hostilities) உடன்பாடு உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேசமயம் 'தாக்குதல் தவிர்ப்பு நிலை' பெரும்பாலும் ஜனவரி 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள இலங்கைக்கான போப்பாண்டவரின் வருகை வரை பெரும்பாலும் நீடிக்கும் வாய்ப்புண்டு. ஆனால் அதற்குப் பிறகான காலநீட்சியானது அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் போர் நிறுத்தம் (Ceasefire) பற்றிய முடிவிலேயே தங்கியுள்ளதுஎன்றே தற்போதைக்குக் கூறமுடியும்.

இரண்டாவது விடயமாக ஆராயப்படுவதும் அலசப்படுவதுமாகிய விடயம் யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப் பாதை திறப்பு விவகாரமாகும். இவ் விவகாரமானது தீவிரமாகப் பேசப்பட்டாலும் போர்நிறுத்தம் குறித்து ஓரளவேனும் முன்னேற்றகரமான சூழ்நிலை உருவாகியுள்ளது போன்றுஇதில்தெரிவதாக இல்லை. அரசாங்கத் தரப்பு இது குறித்து நிரம்பப் பேசினும், தமது முன்னைய நிலைப்பாட்டில் இருந்து சற்றும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

அரசாங்கமும் - இராணுவத்தரப்பும் இவ்விடயத்தில் புளித்துப் போன பழைய கதையையே பேசுகின்றன. ஆனால் அதில் சில புதிய விடயங்களை இணைத்துக் கொண்டு அரசியல்லாபம் தேட முனைகின்றார்கள். பாப்பரசரின் கொழும்பு வருகையை இதற்கு ஆதாயமாகப் பயன்படுத்தப் பார்க்கின்றார்கள். ஆனால் யாழ். மாவட்ட கத்தோலிக்க மக்களினதோ அன்றி ஆயரின் கோரிக்கைக்கோ அவர்கள் செவிமடுப்பதாக இல்லை.

## தாக்குதல் தவிர்ப்பு நிலையும் - போர் நிறுத்தமும்

பொதுவாகவே உலகில் தாக்குதல் தவிர்ப்பு நிலை என்பது போர் நிறுத்தத்தின் ஒரு அங்கமாகவே கொள்ளப்படுவதுண்டு, ஆனால், சிறிலங்கா இராணுவத்தரப்பு இதனை இரு வேறு விடயங்களாக்கியுள்ளன. இதன் பிரகாரம் 'தாக்குதல் தவிர்ப்பு நிலையில்' எதிரணியினரின் இலக்குகளைத் திட்டமிட்டு தாக்குவதைத் தவிர ஏனைய நடவடிக்கை

படுத்திக் கொண்டிருப்பது இராணுவம் போர்நிறுத்தத்திற்கு, அதாவது யுத்த நடவடிக்கைகளின் தயாரிப்புக்கான நிறுத்தத்திற்கு இன்னமும்பச்சைக் கொடி காட்ட வில்லை என்பதை புலப்படுத்துவதாகவே உள்ளது எனலாம்

இவ்வாறான தொரு நிலைப்பாட்டை இராணுவம் மேற்கொள்ளக் காரணம் தற்பொழுது இராணுவத்திற்கு உள்ள சாதகமான நிலை எதையும் இழக்காது பேணிக் கொள்ள முடியும் என்பதினாலேயே ஆகும். அதாவது தாக்குதல் தவிர்ப்பு நிலை மூலம் இராணுவத்தின் இன்றைய நிலை தொடர்ச்சியாகப் பேணிப் பாதுகாக்கப்படும்.

இந்நிலையில் போர் நிறுத்தமானது விடுதலைப் புலிகளுக்கும்- அரசாங்கத்திற்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் போர் நிறுத்தத்தின் போது கடைப்பிடிக்கப்படும் நிபந்தனைகள் தொடர்பான இணக்கமே நிலையான போர் நிறுத்தத்திற்கு வழி செய்ய வேண்டும்.

## பாதை திறப்பும் பின்னடிப்பும்

யுத்தநிறுத்தம் தொடர்பாக சிறிதளவேனும் தளர்ச்சியைக் காட்டியுள்ள இராணுவம் பாதைதிறப்பு விவகாரத்தில் விட்டுக்கொடுப்பிற்கு இடமில்லை என்ற நிலையிலேயே உள்ளது. அரசாங்கமும் - இராணுவமும் யுத்தநிறுத்தத்திற்கு இணங்கியுள்ளது என்ற நிலையில் போக்குவரத்துப் பாதை விவகாரத்தில், இராணுவத்தின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளதாகவே தெரிகின்றது.

சந்திரிகா அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, யுத்தநிறுத்தம், போக்குவரத்துப்பாதை திறப்பு விவகாரம் இரண்டிலும், இராணுவம் விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லை என்ற தொனியிலேயே பேசி வந்தது. ஆரம்பத்தில், இவ்விவகாரத்தில் அரசாங்கம் எடுத்த முயற்சிகளும் தோல்வியடைந்தது.

ஆனால், ஜனாதிபதி, தேர்தலின் பின் ஏற்பட்ட முழுமையான அதிகார மாற்றத்தின் பின்னர் இராணுவத்தரப்பு சில நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வந்ததினால், சற்று தளர்ச்சியைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையும் அவசியமும் அதற்கு எழுந்தது. இந்த நிலையிலேயே போர்நிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ள.அதேவேளை தமது நிலையிலிருந்து பின்வாங்கல்கள் எதுவும் ஏற்படாதவாறு தமது நிலையை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. இதன் அடிப்படையிலேயே போக்குவரத்துப் பாதை திறப்பு விவகாரமும் இராணுவத்தால் கையாளப்படுகின்றது எனலாம்.

இதன்பிரகாரம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் போர்நிறுத்தமோ அன்றி தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடோ தோல்வியடையும் பட்சத்தில் யுத்தத்தை நிறுத்திய இடத்தில் இருந்து தொடர்வதே இராணுவத்தின் நோக்கமாகும். அதாவது யாழ்ப்பாணத்தின் மீதான இராணுவ நடவடிக்கைத் திட்டத்தை மாற்றமின்றியே செயற்படுத்தும் திட்டமாகும்.

இந்தநிலையில் இராணுவத் தரப்பும் - அரசாங்கமும் இணைந்து பாதை திறப்பு விவகாரத்தை மத உணர்ச்சி ஒன்றிற்குள் இணைக்குவிட முற்படுகின்

டும். அதற்கான பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என யாழ். மறை மாவட்ட ஆயர் சிறிலங்கா ஜனாதிபதியிடமும், இராணுவத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்தது வெளிப்படையானது.

இக்கோரிக்கையானது, யாழ்ப்பாணத்தில் இருந்து யாத்திரிகர்கள் செல்வதற்கு பாதை இல்லாததினால் அல்ல. பெருந்தொகையானோர் செல்ல இருப்பதால் சற்றுச் சிரமமின்றிப் போக்குவரத்தை மேற்கொள்வதற்காக விடுக்கப்பட்டதே ஒழிய, இது வரை அரசியல் / இராணுவ ரீதியாக முக்கியம்பெற்ற ஒரு பிரச்சினையுடன் மதத்தையும் இணைத்து விடுவதற்கான கோரிக்கையல்ல.

இதனை அருட்திரு. அலெக்சாண்டர் அவர்கள் தெளிவாகவே கூறியிருந்தார். ''பாப்பரசரைத் தரிசிப்பதற்காகக் கொழும்பு செல்லும் யாத்திரிகர்கள் நிரந்தரப் பாதை ஒன்று ஊடாகவே கொழும்பு சென்று வர வேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். இடைப்பட்ட தேவை ஒன்றிற்காக தற்காலிகமான பாதை திறப்பதை நாம் விரும்பவில்லை. இது ஒரு அரசியல் சார்ந்த பிரச்சினை. மிக அவதானமாகவே இவ் விவகாரம் கையாளப்பட வேண்டும்'' என இச்சிக்கலான அரசியல் விவகாரத்தை மதத்துடன் இணைக்க வேண்டாம் என அவர் தெளிவுபடுத்தியிருந்தார்.

இதேசமயம், இக் கோரிக்கையானது பாப்பாண்டவர் வருகையையொட்டித்தான் முதன் முதலாக முன்வைக்கப் பட்ட கோரிக்கையும் அல்ல. யாழ்ப்பாண மக்களின் சார்பாக ஏற்கனவே ஆயர் உட்பட பலராலும் யாழ்ப்பாண மக்களின் சார்பாகவும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைதான்.

## முதலாம் கட்ட பேச்சுவார்த்தையும் பாதை விவகாரமும்

அத்தோடு, பாதை திறப்பு விவகாரம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போதும் பிரஸ்தாபிக்கப்பட்ட முக்கிய விடயங்களின் ஒன்று. அப்பொழுது, ''யாழ். குடாநாட்டு மக்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் நடமாட தரைவழிப்பாதைஒன்றுதிறக்கப்படல்வேண்டும்' எனத் தெளிவாகவே வலியுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் போக்குவரத்துப் பாதைக்கு இடையூறாகவுள்ள இராணுவ முகாம்கள் எடுக்கப்பட்டு / மூடப்பட்டு போக்குவரத்துப் பாதை திறக்கப்பட வேண்டும் என்பதேபுலிகளின் நிலைப்பாடாக இருந்தது.

இந்த வகையில், ஆனையிறவுப் பாதை திறப்பதைவிட பூநகரிப்பாதைதிறப்பது என்பது சாத்தியமானது என்ற ரீதியிலேயே தமிழ் மக்களினாலும் விடுதலைப் புலிகளினாலும் இப்பாதை திறப்பது பற்றி அடிக்கடி வலியுறுத்தப்பட்டது. ஆனால் இராணுவத் தரப்பு இதனைப் பரிசீலனை செய்வதற்கு எப்பொழுதுமேதயாராகஇருக்கவில்லை.

இதன் காரணமாகவே ஆனையிறவுப் பாதையூடாகப் பயணம் மேற்கொள்வது பற்றி அரசாங்கம் பிரசாரம் செய்கிறது. தரைவழியாக சுலபமாகப் பிரயாணம் செய்யக்கூடியதான ஆனையிறவுப் பாதை இருக்கையில் கடல்வழிப் பாதையான பூநகரிப் பாதையை ஏன் திறந்து விட வேண்டும்? என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி சில்வா கேள்வி எழுப்புகின்றார்.

ஆனையிறவு முகாமிற்கூடாக அதாவது இயக்கச்சிச் சந்தியில் இருந்து பரந்தன் சந்திக்கு அண்மை வரையிலுள்ள பல மைல்கள் பயணம் செய்வதென்பது எத்தகைய தூரம் தமிழ் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக் கூடியது. மேலும்' நெருக்கடியான ஒரு வேளையில் இவ் இராணுவக் கிராமங்களுக்குள் சிக்குபவர்களின் உயிருக்கும், உடைமைக்குமான உத்தரவாதத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது.

இவையாவற்றிற்கும் மேலாகதனது யாழ். குடாநாட்டின்மீதானபோர் முறைத்திட்டத்தை கைவிடத் தயாராகஇல்லாத இராணுவத்தலைமைப் பீடத்தை நம்பி பாதையைத் திறந்து விடுதல்என்பதுஎத்தகைய சாத்தியமாகக்கூடியது. ஏற்கனவே உடன்பாடு மூலம் திறந்துவிட்ட பாதையை தனது இராணுவத் தேவைக்குப் பயன்படுத்தி மாதகல், இளவாலைப் பகுதிகளை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்ட வரலாறும் இல்லாமல் இல்லை.

## ஏற்கனவே நிராகரிக்கப்பட்டது

இவற்றின் அடிப்படையிலே 1993லேயே இராணுவத்தினரின்கண்காணிப்பின்கீழ் பூநகரிபாதை ஊடாக பயணம் செய்யும்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். அதற்கு பாதுகாப்பு இன்மை, சுதந்திரமான நடமாட்டத்திற்குத் தடைஎன்பதையேகாரணம்என விளக்கப்பட்டமையும் தெரியும். ஆனால், அப்பொழுது கிளாலிக்கடற்பரப்பில் - முழுமையான பாதுகாப்பான பயணம் இருக்கவில்லை என்பதும் முக்கியமானதாக இருந்தது.

ஆனால் அவ்வாறான நிலையிலும் ஏற்றுக்கொள்ளாதஓர்விடயத்தை, கிளாலிக்கடற்பரப்புவிடுதலைப்புலிகள் பூரணக் கட்டுப்பாட்டில் வந்தபின்னர் அதாவது தமிழ்மக்களின் சுதந்திரமான, பாதுகாப்பான பயணத்திற்கு வழி ஏற்பட்ட பின்பும், அரசாங்கத் தரப்பும், இராணுவத்தரப்பும் ஆனையிறவுப் பாதையை வலியுறுத்துவதென்பது அவர்கள் தமது சிந்தனையிலும் குறிக்கோளிலும் இருந்தும் மாறவில்லை என்பதையே காட்டுவதாக உள்ளது. இந்தவகையில் இன்று பாப்பரசரின் வருகையுடன் பாதை திறப்பதை சம்பந்தப்படுத்துவது தமிழர் மத்தியில் முரண்பாட்டைத் தோற்றுவிப்பதற்கான முயற்சி என்றே கூறலாம். அத்தோடு, சமாதானப் பேச்சுகள் வந்தாலும் சரி, யுத்தநிறுத்தம் ஏற்பட்டாலும் சரி தனது நிலைகளில் இருந்து இராணுவம் பின்வாங்குவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டை இது வெளிப்படுத்துவதாகவுள்ளது.

இதன் அடிப்படையிலேயே, யாழ்- ஆயரை சந்திப்பதற்கு ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இறுதி நேரத்தில் இச் சந்திப்பை இரத்துச் செய்ததையும் நோக்கவேண்டும். பூநகரிப்பாதை தொடர்பானஆயரின் கோரிக்கைக்கு ஜனாதிபதியால் பதில் அளிக்க முடியாத சங்கடமான நிலையே இச்சந்திப்பு தவிர்க்கப்பட்டமைக்கான காரணம் எனக் கொள்ளுதல் தவறானதாகா து-

- ஜெயராஜ் -

இந்த வகையில், ஒருபுறம் தனது இராணுவ தந்திரோபாயங்கள் எவையும் பாதிக்கப்படாமல், அதேசமயம் மதரீதியான சில உணர்ச்சிகர விடயங்

ப்பு நிலையில்' எதிரணியினரின் இலக்குகளைத் திட்டமிட்டு தாக்குவதைத் தவிர ஏனைய நடவடிக்கைகள் யாவும் வழமைபோல் இடம் பெறும். அதாவது இராணுவத்தை தயார் படுத்துதல், தயார் நிலையில் வைத்திருத்தல், புலனாய்வு வேலைகளைத் தொடர்வது பதுங்கு குழிகளை அமைப்பது போன்ற சகல நடவடிக்கைகளையும் தாக்குதல் தவிர்ப்பு நிலை என்பதின் கீழ் மேற்கொள்ளமுடியும்.

இந்தவகையில், சிறிலங்கா இராணுவமானது போர்நிறுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தாமல் தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு ஒன்றிற்கு தயார்

இந்தநிலையில் இராணுவத் தரப்பும் -அரசாங்கமும் இணைந்து பாதை திறப்பு விவகாரத்தை மத உணர்ச்சி ஒன்றிற்குள் இணைத்துவிட முற்படுகின்றன. இதன்வெளிப்பாடாகவேகொழும்புவரும்பாப்பரசரைத் தரிசிக்கச் செல்லும் யாத்திரிகர்களுக்கு ஆனையிறவுப் பாதையைத் திறந்து விட - திறந்துவிட்டுள்ளதாக அரசாங்கமும் - இராணுவமும் தொடராக வெளியிடும் அறிவிப்புக்களாகும்.

## ஆயரின் கோரிக்கை

கொழும்பு வரும் பாப்பரசரைச் சந்திக்க பாதுகாப்பான பாதை ஒன்று திறந்து விடப்பட வேண்

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி சில்வா கேள்வி எழுப்புகின்றார்.

இதில் அரசாங்கமும்- இராணுவமும் விடயத்தை முற்றாகவே திசை திருப்ப முற்படுகின்றனர். தமிழ் மக்கள் இன்று கேட்பது பாதுகாப்பானதும், சுதந்திரமானதுமான பாதை ஒன்றையே ஒழிய, சுலபமான இலகுவான பாதை ஒன்றைமட்டுமல்ல. இந்த நிலையில், ஆனையிறவுப் பாதை எத்தகைய தூரம் இவற்றை நிவர்த்தி செய்யும் என்பதே முக்கியமானதாகும்.

இந்த வகையில், ஒருபுறம் தனது இராணுவ தந்திரோபாயங்கள் எவையும் பாதிக்கப்படாமல், அதேசமயம் மதரீதியான சில உணர்ச்சிகர விடயங்களை தூண்டும் விதத்திலேயே யாழ்குடாநாட்டிற்கான பாதைதிறப்பு விடயத்தை அரசாங்கமும்- இராணுவமும் கூட்டாகக் கையாளுகின்றன என்பதே இன்றைய முக்கியவிடயமாகின்றது.

இது அரசாங்கத்திற்கும் - இராணுவத்திற்கும் இடையில் ஜனாதிபதி தேர்தலின்பின் ஏற்பட்ட விட்டுக்கொடுப்பின் அடிப் படையிலானதும், அரசாங்கத்தின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றத்தின் வெளிப்பாட்டினடிப்படையிலானதும் ஆகும்.

---

# சோட்டோகான்

கிட்டத்தட்ட பத்தொன்பது பேரிடம் பழகி வந்திருக்கிறேன். 79இல் ரவீந்திரன் என்ற மட்டக்களப்பு பயிற்சியாளரை பொனிறொபர்ட்ஸ் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியிருந்தார். உண்மையில், ரவீந்திரன்தான் எனக்கு கராட்டேயின் நுட்பங்களை பழக்கித்தந்தார், இவர் மூலமாகவே பொனிறொபர்ட்சிடம் எனக்குநேரடி அறிமுகம் கிடைத்தது. இதன் பின்பே இலங்கை கராட்டே கழகத்தின். அங்கீகாரம் எனக்கு கிடைத்தது

☐ உங்களுடைய அனுபவங்களின்படி கராட்டேயின் நுட்பங்கள் மாற்றமடைந்து வருகின்றதை அறிய முடிகிறதா?

நிச்சயமாக. காலத்துக்கு காலம் கராட்டேயின் நுட்பங்கள் மாறிக் கொண்டே வருகின்றது. 82 இலிருந்த தொழினுட்பம் மாறி ஒருவர் தாக்கும்போது தடுக்காமலே அடிக்கும் நுட்பம் வந்துள்ளது. பொனிறோபர்ட்ஸ் ஜப்பானிலிருந்து பயிற்சிகளை பெற்று இங்கே அதை அறிமுகப்படுத்துகிறார். புதிய நுட்பத்தில் கை, கால்கள் சரிவர இயங்காதவர் கூட கராட்டேயை பழகி தாக்குதலை செய்யலாம் ஒருவர்வாளால் வெட்ட வந்தால்கூட கை கொடுத்து அந்த தாக்குதலை தடுக்காமல் ஒருபுறம் நகர்ந்து தாக்குதலை நடத்தலாம். வேறு வழியில் உடலில் கூறப்படும் பலவீனமான இடங்களை குறிவைத்து தாக்கும் நுட்பமும் வளர்ந்து வந்துள்ளது இந்நிலையில் குத்துக்களை **(Punch)** கொண்டு வந்து அருகில் நிறுத்துவது. கறுப்புப் பட்டியில் இவ்வாறு பாதிப்பில்லாத குத்துக்களை விடுவது பற்றி கூடுதலாக அறியப்பட்டு வருகின்றது. ஏனெனில் கராட்டே மற்றவரை அடித்து முறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டால் அங்கு வளர்ச்சி கொஞ்சமும்கிடைக்காது. தனியே தாக்குதலை உயிரை உடலை பாதிக்கக் கூடிய வகையில் நடத்துவதற்கும் கராட்டேயின் சில நுட்பங்களுள்ளன. இவை விளையாட்டுக்கான நோக்கத்தை தவிர்த்ததாகவே அமையும்.

☐ கராட்டேயில் சோட்டோகான் பாணியையே நீங்கள் பின்பற்றுவதன் காரணம் என்ன?

கராட்டேயில் **Main Style** என்று ஒன்றுள்ளது. அதைக் 'கான்' என்கிறோம். உதாரணமாக சோட்டோகான், ஆடோகான் என ''கான்'' என்று முடியும். ''கான்'' என்ற தரத்திற்கு போவதற்கு முதல் ''காய்'' என்ற தரம் உள்ளது. சோட்டோ காய், ஆடோகாய் என்று அவை இருக்கும் இலங்கை கராட்டே சங்கத்தின் செயற்பாடுகளை ஜப்பான் அங்கீகரிக்க முதல் ''சாய்'' என்ற தரமே இங்கும் இருந்தது. இதனை **SubStyle** எனக் கூறுவர் ஜப்பானிய நிபுணர்களின் பரீட்சைகளின் பின் அவர்கள் திருப்தி காணும்போதே ''கான்'' எனும் **Main Style** யை பழக முடியும் இலங்கைக்கே சோட்டோகான் என்ற **Main Style** 86 இலேயே பொனிறோபர்ட்சினால் அறிமுகம் செய்யப்பட்டதும்குறிப்பிடத் தக்கது. நாங்கள் பொனிறோபர்ட்சைப் பின்பற்றியதால் அவருடனேயே **Main Style**க்கு நாங்களும் மாறினோம்.

☐ உங்களுக்கான அங்கீகாரம் எவ்வாறு கிடைத்தது?

நான் இலங்கை கராட்டே கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறேன். இலங்கை கராட்டே கழகம் ஜப்பானிய சோட்டோகான் நிபுணர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. எனது தகுதி யாழ். பல்கலைக கழகத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நான் முதன்முதலாக கராட்டே பழக்குவதற்காக யாழ். பல்கலைக்கழகத்திடம் விண்ணப்பித்திருந்தேன். அந்தக் கால கட்டத்தில்தென்னிலங்கையில் ஜே வி பி கிளர்ச்சி உச்சமடைந்திருந்தபடியால் பல்கலைக் கழகங்களில் தற்காப்பு கலைகள் கூட தடை செய்யப்பட்டிருந்தது. அந்த நிலையிலும் துணைவேந்தர் அமரர் துரைராசாவிடம் எனது தகுதிக்கான ஆவணங்களை நேரடியாக சமர்ப்பித்தபோது என்னை பல்கலைக் கழகத்தில் கராட்டே பயிற்றுனராக ஏற்றுக் கொண்டார்.

☐ யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் இன்று கராட்டே வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அவற்றை நடத்துபவர்கள் அங்கீகாரமளிக்கப் பட்டவர்களா?

பணமும் ஏமாறுவதற்கென கராட்டே பயில்பவர்கள் தயாராக இருப்பதுவும் அவர்களை கராட்டே பயிற்றுனர்களாக அங்கீகரித்துள்ளது. இன்று கண்டபடி பெருகியுள்ள இந்த போலித்தனத்தை சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது. கராட்டே பயிற்சியாளர் என்ற தகுதியை இலங்கை கராட்டே சங்கம் தான் அங்கீகரிக்க வேண்டும். இங்கு தங்களுக்கு தாங்களே அங்கீகாரம் சூட்டிக் கொண்டவர்கள் நிறையப் பேருள்ளனர். சிலர் ஆரம்பத்தில் பொனி றோபர்ட்சின் பிரதி

(2ஆம் பக்கம் பார்க்க)

---

## விடுதலை

னது- வின்னியோடு பேச தான் பட்ட வேதனையை மண்டேலா மனம் கசிய எழுதுகின்றார்.

### மனவுறுதியின் வடிவமே மண்டேலா

திடீரென ஒரு நாள் மண்டேலா உட்பட எல்லோரும் சுண்ணாம்புவெட்டியெடுக்கும் பாறைகட்கு முன்னால் நிறுத்தப்பட்டனர். சுட்டெரிக்கும் வெயிலில் நாள் முழுவதும் பாறைகளில்இருந்து சுண்ணாம்புப்பாறை வெட்டியெடுக்கும் மிகக் கடினமான பணி. - 6 மாதத்திற்கே இப்பணி என்றபோதும்13வருடங்களாக இப் பணி நீடித்தது. பலரின் கண்பார்வை வெப்பம் காரணமாக பாதிப்படைந்தது. இவ்வாறு எல்லாம் தம்மை கீழ்நிலைப் படுத்தி, சிறுமைப்படுத்தி தமது உணர்வுகளை மரத்துப்போகச் செய்ய தமது மேன்மையை இழிவு படுத்த எடுக்கும் முயற்சிகளைதாங்கி ஒருவர் தன்னை இழக்காமல் இருத்தலே சிறையில் எதிர்நோக்கப்படும் மிகப்பெரிய சவால் என்றார் மண்டேலா சிறையதிகாரிகள் நினைத்தது போலல்லாமல் தமது மன உறுதி மேலும் வளர்ந்தது என்றும் அடக்குமுறை நிலவும் நாட்டில் அதை எவ்வடிவத்தில் வந்தாலும் எதிர்ப்பது என்ற முடிவில் உறுதியாகஇருந்ததாலும் தோழர்கள் ஒன்றாக பேசும், சூழ்நிலை இருந்ததாலும் மன உறுதி இழக்கப்படவில்லை என்கின்றார் மண்டேலா. இச்சிறை வாழ்வின் ஊடே தன்னுள் ஏற்பட்ட மாற்றம் பற்றியும் மண்டேலா சுயவிமரிசனம் செய்கின்றார் .18 வருட சிறைவாழ்வு எமது சிந்தனை போராட்டத்தை ஒரே யிடத்தில்தடுத்துஉறையச்செய்துவிட்டதோ என்கிற பயம் தனக்கு தோன்றியதை ஒத்துக் கொண்டும் மண்டேலா முடிந்தளவு புதியஎண்ணக்கருத்துக் கட்குதன்னைமூடாமல்திறந்து வைக்கவே முயன்றதாககுறிப்பிடுகின்றார். கூடிவிவாதித்து எம்மை நாமே தேக்க நிலையிலிருந்து காப்பாற்ற முயன்றோம் என்கின்றார் மண்டேலா.

ஆகஸ்ட் 1976 சுவெட்டோ எழுச்சியின் பின் சிறைக்குள் வந்த தீவிரமான வ.ாலிடர்களின் போக்கினை நிராகரிக்காமல் தான் புரிந்துகொள்ள முற்பட்ட போதும் சரியான வேலைத் திட்டமோ போராட்டப்பாதையோவகுக்காமல் தீவிர கறுப்பு இன உணர்வு வளர்வதைதான் விரும்பவில்லை எனகின்றார். எனவே தான் இவர்கட்கு ஆலோசனை வழங்கும் நல்வழிப்படுத்தும் ஒரு முதிர்ச்சியடைந்த அறிவாளி போல் செயற்பட முடிவெடுத்தேன் என்கிறார். இருந்த போதும் மிக நீண்ட காலமாகவே ஒரு மிகத் தீவிரமான புரட்சியாளன் என்கிற பெயரைப் பெற்ற தனக்கு மிதவாதி -சாந்தவாதி பட்டம் கிடைத்தது மகிழ்ச்சிக்குரிய விடயம்இல்லையென்றும்ஒப்புக் கொள்கின்றார்.

தனது அரசியல் வாழ்விலும் சரி, சிறைவாழ்விலும் சரி, தலைவன் என்ற வகையில் எடுக்கும் முடிவுகள் பலரின் வரவேற்பையும் பெறாததாகவோ அல்லது அதன் நல்விளைவுகள் நீண்ட காலத்திற்கு தெரியாததாகவோ இருந்தது என்று கூறும் மண்டேலா சில வேளைகளில் அடையப்படும் வெற்றியின் மகத்துவமும் அதை அடையக் காரணமாகவிருந்தவனுக்கே மட்டும் புலப்படும் நிலையும் உள்ளது என்று தனது பட்டறிவையும் பகர்கின்றார். இறுதியாக அவர் கூறுவது ''நான் அடிப்படையில் ஒரு நன்னம்பிக்கையாளன். கொண்ட கொள்கையின்படி நல்லதே நடக்கும் என்று எண்ணுபவனின் தலை எப்போதும் சூரியனை நோக்கியிருக்கும். அவன் கால்கள் எப்போதும் முன்னோக்கியே எட்டி நடைபோடும்.''

இதுதான் மண்டேலா எனும் மகத்தான மனிதரின் விடுதலை நோக்கிய நீண்ட நடைப்பயணமாகின்றது.

# தாண்டிக்குளத்தில் அனுமதி அட்டை; 25லட். ரூ. செலவில் காரியாலயம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் அனுமதி அட்டை வழங்கும் காரியாலயம் ஒன்று பெரியளவில் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கெனபாதுகாப்புஅமைச்சினால் இருபத்திஐந்து இலட்சம் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

தற்போது வவுனியா நகருக்கு அண்மையில் உள்ள பிறவுண் அன் கொம்பனியில் இந்த அலுவலகம் இயங்கி வருகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்து வடபகுதியிலிருந்து வவுனியா நகருக்கும் மற்றும் தென்பகுதிகளுக்கும் செல்லும் வடபகுதி பயணிகளுக்கான அனுமதி அட்டை வழங்கும் தற்காலிக அலுவலகமாக இது செயற்பட்டு வருகிறது.

இந்த அலுவலகத்தை மூடிவிட்டு தாண்டிக்குளம் பகுதியில் சகல வசதிகளுடனும் இதற்கென பெரியளவில் ஒரு கட்டடமும் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வட பகுதியிலிருந்து செல்லும் தமிழ்ப் பயணிகளை விசாரித்தும் வேறு தகவல்களைப்பெற்றும் இந்தக் காரியாலயத்தில் வைத்து அனுமதி அட்டை வழங்கப்படும். சந்தேகத்திற்குரியவர்கள் விசாரணைக்குட்படுத்தப்படுவதுடன் இங்கு தடுத்தும் வைக்கப்படுவார்கள்.

இதுவரைகாலமும் பிறவுண் அன் கொம்பனியில் இதே நடவடிக்கையே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புதிய காரியாலயத்தின் கட்டட செலவிற்கென பாதுகாப்பு அமைச்சினால் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது ஒரு நிரந்தர அனுமதி அட்டை வழங்கும் செயலகமாக செயற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தாண்டிக்குளம் பகுதியிலும் புகையிரத நிலையம் ஒன்றிருப்பதனால் வடக்கிலிருந்து செல்லும் கொழும்புப் பயணிகளை நேரடியாக கொழும்பிற்கு அனுப்பி வைக்கவும் இது உதவலாம் தவிர வவுனியா நகர்ப் பயணிகளையும் மக்களையும் வித்தியாசப் படுத்தி கண்காணிப்பதற்கும் இது உதவலாம் எனவும் தெரியவருகின்றது. (தி)

# ஓமானில் சிக்கியுள்ள 50 யுவதிகளை மீட்டு தருக

கடந்த இரண்டு வருடங்களுக்கும் அதிகமாக வேலையின்றிஓமானில்இலங்கையைச் சேர்ந்த 50 ஆடைத் தொழிற்சாலை யுவதிகள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் மேற்படி யுவதிகளின் பெற்றோர்கள் புகார் தெரிவித்துள்ளதுடன் இவர்களை திரும்பிஅழைக்க உதவுமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது

# மந்தகதியில் இடம் பெறும் வெள்ள நிவாரணப் பணி

கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மந்தகதியிலேயே நிவாரணம் வழங்கப்படுவதாக அரச சார்பு பத்திரிகையொன்று குற்றம்சாட்டியுள்ளது.

வெள்ள அனர்த்தத்தினால் செங்கலடிப் பகுதியில் மட்டும் 35,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 173வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் 20 ஆயிரம் ஏக்கர் வயல்கள் நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வெள்ள நிவாரணத்திற்கு வந்தோரே வாவியில் மூழ்கி மரணமாயினர்

## உயிர்தப்பியவர் தகவல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வெள்ள நிவாரணம் பெற வந்தவர்களே வாவியில் படகு கவிழ்ந்ததால் மூழ்கி மரணமானதாக அச்சம்பவத்தில் தப்பி வந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது, மழைவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நாம் வெள்ள நிவாரணம் பெறுவதற்காக இரு சிறிய தோணிகளை கட்டி திகிலிவெட்டையிலிருந்து மொறக்கொட்டாஞ்சேனைக்கு வந்தபோதே படகு கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என அச்சம்பவத்தில் சிக்கி நீந்திக் கரைசேர்ந்த வீரக்குட்டி குணரட்ணம் என்பவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி விபத்தில் பலியான பதினொரு பேரின் மரண விசாரணையில் சாட்சியமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# உலக வங்கி குழுவின் யாழ். விஜயம் தாமதம்

யாழ்ப்பாணத்திற்கு கிளாலி மார்க்கமாக இன்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட உலக வங்கி குழுவின் பயணம் பின்போடப்பட்டுள்ளது.

கடந்த வாரம்கிளிநொச்சி வந்து சேர்ந்த இக்குழு முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் சென்று புனரமைப்பு திட்டத்திற்கான தகவல்களைச் சேகரித்துக் கொண்டு கொழும்பு திரும்பியுள்ளது.

இக்குழுவினர் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (தி)(பா)

# மாவுடன் 'குமண'

தற்சமயம் யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டைபோக்கும்முகமாக திருகோணமலையில் 1000 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு ''குமண'' கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகம் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இழுவைப்படகு எடுத்துவர முயற்சி

பருத்தித்துறை இறங்குதுறைக்கு இரண்டு இழுவைப் படகுகள் எடுத்துவர முயற்சிக்கப்படுவதாக தெரியவருகிறது.

புல்மோட்டையிலிருந்து மேற்படிஇழுவைப் படகுகள் எடுத்துவரப்படவுள்ளன.


# பாராட்டு

## ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை-1994

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்கள் எண்மர் (8) 1994-ல் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து ஊர்காவற்றுறை கோட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். இம் மாணவர்களை வாழ்த்துவதுடன் இப் பெறுபேறுகளை பெறுவதற்கு தன்னலங் கருதாது சேவையாற்றிய கனிஷ்ட பிரிவுபொறுப்பாசிரியை திருமதி சரஸ்வதி யோகலிங்கம் அவர்களையும், ஆக்கமும், ஊக்கமும்அளித்து ஆர்வத்துடன்செயல்பட்டு வரும் அதிபரையும், சிரமம் பாராது கல்லூரியில் சேவையாற்றும்ஆசிரியர்களையும், கல்லூரியின் பழைய மாணவர் மன்றம் பாராட்டிப் பேருவகை அடைகின்றது.

சித்தி பெற்ற மாணவர்கள்;

| | |
|---|---|
| பே. கேமபாலன் | க. கோபிநாத் |
| ச. காயத்திரிதேவி | செ. கார்த்திகா |
| வே. மயூரன் | ப. மயூரன் |
| சி. அருந்ததி | பே. கிரிஜா |

-பழைய மாணவர் மன்றம்

யாழ்ற்ரன் கல்லூரி,
(காரைநகர்)
வட்டுக்கோட்டை. [10343]



இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

மகாத்மா நெல்லியடி

தெய்வேந்திரா சாவகச்சேரி


# 750 பரல் மண்ணெய் இறக்கப்பட்டது

பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்து சேர்ந்த ''மாகோ'' கப்பலில் இருந்து கடல் கொந்தளிப்பின் மத்தியில் நேற்று மட்டும் 750 பரல் மண்ணெண்ணெய் இறக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்தனர்.

புலிகளுடனான

வானொலி தெரிவித்தது,

நேற்று முன்தினம் இரவு புதுடில்லியில் நரசிம்மராவை

வடக்கு

இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஜனநாயக நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டுள்ளன.

இதை சிறிலங்கா அரசும் ஏற்றுக்கொண்டுள்ள போதும் அதன்படி ஒழுகி நடந்துகொள்ளவில்லை என அவ் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இதைத்தொடர்ந்து அவ் அமைப்பானது தனது கொழும்பில் உள்ள அலுவலகத்தின் ஊடாக இலங்கை அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடபகுதிக்கு போதுமான மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்தல். தேவையான உணவுப்பொட்களை அனுப்பி வைத்தல், விசாரனைகள் இன்றி சிறிலங்கா சிறை

உயர்தர

கல்வியாண்டுக்கு பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான வெட்டுப்புள்ளிகளும் இம்மாத நடுப்பகுதியளவில் வெளியாகும் என தெரியவருகிறது

தற்போது பல்கலைக்கழகங்களுக்கான குறிப்பிட்ட கல்வியாண்டுக்கான மாணவ அனுமதிகள் தொடர்பான பணிகளும் பூர்த்தியடைந்த நிலையில் இருப்பதால் இம்மாத இறுதியில் தெரிவான மாணவர் விபரத்தையும் வெளியிட முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனிஷ்ட

களை வழங்கும் வண்ணம் அதிபர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

அத்துடன் இப்பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்


# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை ஞானகுரு
[ஞானி, இளையஐயா]

நெடியகாடு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்லத்துரை ஞானகுரு [குமரன் மில்ஸ். செம்மண் தீவு, உரிமையாளர்] காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தண்டையல் செல்லத்துரை தங்கரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், சறோஜினிதேவியின் [வண்ணம்] அன்புக்கணவரும், திருமதி சந்திரா அற்புதலிங்கம், சிறிகாந், உஷா, குமரன், அகிலன், அமுதா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

ஈமக் கிரியைகள் இருபாலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலை நடைபெறும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கோண்டாவில் வீதி,
இருபாலை. (10342)

## மகாத்மா நெல்லியடி

## தெய்வேந்திரா சாவகச்சேரி

ஆகிய திரைஅரங்குகளின்
அகன்ற திரையில்

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகமும்
நிதர்சனமும் இணைந்து
திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

# “பிஞ்சு மனம்”

(வர்ண முழு நீளப்படம்)

தினசரி- 6.30
சனி, ஞாயிறு- 10.30, 2.30, 6 30

(சி-10858)


யினர் தெரிவித்தனர்.

## புலிகளுடனான

வானொலி தெரிவித்தது.

நேற்று முன்தினம் இரவு புதுடில்லியில் நரசிம்மராவை சந்தித்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சந்திரிகா அரசாங்கம் பதவி பேற்றதும் சிறப்புத் தூதுவர் ஒருவரை இந்திய அரசு கொழும்புக்கு அனுப்பியமை இந்திய-சிறிலங்கா உறவுக்கு ஒரு நல்ல தொடக்கமாக இருந்ததாக லக்ஷ்மன் கதிர்காமர் நரசிம்மராவிடம் கூறியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன,

இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள்சர்மா, இந்திய வெளிவிவகார அமைச்சர் தினேஷ் சிங் ஆகியோரையும் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துப் பேசியுள்ளார்.

ளது.

வடபகுதிக்கு போதுமான மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்தல். தேவையான உணவுப்பொட்களை அனுப்பி வைத்தல், விசாரணைகள் இன்றி சிறிலங்கா சிறைகளில் தடுத்துவைத்துள்ள கைதிகளை விடுதலை செய்தல் வேண்டும் என அவ் வேண்டுகோளில் கேட்கப் பட்டுள்ளது.

பட்டுள்ளது.

## கனிஷ்ட

களை வழங்கும் வண்ணம் அதிபர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

அத்துடன் இப்பரீட்சைக்கு தோற்றுகின்றமாணவர்கள் தங்களது பாடசாலை அதிபர்களை எதிர் வரும் 13 ஆம் திகதிக்கு முன்னதாக சந்திக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். (பா)(தி)

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் 1994-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12-ம் திகதி (12-12-94) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில்

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் திருநிறைச்செல்வன் | எமது ஏகபுத்திரி திருநிறைச்செல்வி |
| **அன்றூ ஞானேஸ்வரன்** | **லெற்றிசியாராணி(மைனா)** |
| (பிரான்ஸ்) | (கலைப்பீட மாணவி |
| அவர்கட்கும் | யாழ். பல்கலைக் கழகம்) அவர்கட்கும் |

திருமண திருச்சடங்கு நடைபெறும். அவ்வமயம் உற்றார், உறவினர், அயலவர் அனைவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

14-12-94 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு மணமகனில்லத்தில்
வரவேற்புபசாரம் நடை பெறும்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| வைத்திய கலாநிதி | |
| திந. திருமதி ஜி. ஜோர்ஜ் J. P. | திரு. திருமதி வெலிச்சோர் ஆபரணம் |
| புவன வாசம், | சங். சகோ. ஜெறோம் (அ.ம.தி.) |
| சுன்னாகம். | டாக்டர் சுப்பிரமணியம் வீதி, |
| | சுன்னாகம். |

( இரு வீட்டார் அழைப்பு )

(10322)

# இதய அஞ்சலி

அமரர்

## முத்தர் கந்தையா சண்முகலிங்கம் அவர்கள்

(கல்வியங்காடு)

வீரபத்திரர் தேவஸ்தான முன்னாள் தலைவரும் பொருளாளருமாகிய உயர் திரு.மு. க. சண்முகலிங்கம் அவர்கள் சென்னை மருத்துவ மனையில் 2-12-94 வெள்ளியன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம். அன்னார் ஆற்றிய சேவையை நன்றியுடன் நினைவு கூர்ந்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பரிபாலன சபை
யாழ்- கல்வியங்காடு வீரபத்திரர்
தேவஸ்தானம்

[10339]

# நன்றி நவிலல்

## கதிரமலை கந்தசாமி

வண். வடக்குப் பகுதியில் கிராமசேவையாளராகப் பதவி வகித்தவரும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கதிரமலை கந்தசாமி அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னாரது இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டவர்கட்கும், மற்றும் சகல விடயங்களில் உதவி புரிந்தவர்கட்கும், இரங்கலுரை நிகழ்ச்சியை சிறப்பாக நடாத்தியவர்கட்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
திருமதி கந்தசாமி (மனைவி)
மக்கள், உறவினர்.

(சி-10882)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


தகவல்:
குடும்பத்தினர்.

கோண்டாவில் வீதி,
இருபாலை.

(10342)

# திருமதி ஜெறோம் ஜொய்சி

திருமதி ஜெறோம் ஜொய்சி 7-12-1994 இல் இறைவனடி சேர்ந்தார். இவர் அந்தோனிப்பிள்ளை ஜெறோம் அவர்களின் அன்பு மனைவியும் முத்துமணி காலம் சென்ற பிலோமினா ஆகியோரின் அன்பு மகளும் திருமதி யுஸ்ரின் அன்ரனிப்பிள்ளை, .சென் பற்றிக்ஸ் கல்லூரி), திருமதி பிறேமா றொபேட், நெவில் (பிரான்ஸ்), ஜீன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம் சென்ற அந்தோனிப்பிள்ளை, மேரி யோசேப்பின் ஆகியோரின் அருமை மருமகளும், திருமதி பிரான்சிஸ் ஞானமலர், அகஸ்ரின் மரியமலர், அல்போன்ஸ் (இத்தாலி) ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார்,

அன்னாரின் பூதவுடல் இன்று (9-12-1994 வெள்ளிக்கிழமை) பி. ப. 3: 15 மணிக்கு 48, கடற்கரை வீதி, பாஷையூரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
தி. றொபேட்
பாஷையூர்

(10341)

# கதிரிப்பிள்ளை அம்பலவாணர்

(இளைப்பாறிய ஆசிரியர், ஏழாலை தெற்கு)

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கில் வசித்தவருமாகிய கதிரிப்பிள்ளை அம்பலவாணர் நேற்று (08-12-94) இயற்கை எய்தினார். இவர் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னம்மா (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மயில்வாகனம், கந்தவனம், காலஞ்சென்ற சபாபதி, கனகம்மா, காமாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோமளவல்லி, பரமநாதன் (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, யாழ்ப்பாணம்), சத்தியநாதன் (லண்டன்), நேமிநாதன், சுதர்சனா, உமாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தி. விநாயகமூர்த்தி (யாழ். மாநகரசபை), வத்சலா, ரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சலஷா, சலோஜனன், வேணுஷா, பாலலோஜனன், கோபிஷா, நர்த்தனன், மகிதனன், சுஜீவன், றஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று வெள்ளிக்கிழமை (09-12-94) நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி. இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. பரமநாதன்
(மகன்)

சாம் வீதி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(10344)